பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
15 JUL 2004

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 31 | வியாழக்கிழமை | (15.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 209

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இலங்கையில் போர் வெடிக்கும் அபாயம் தவிர்க்க முடியாததாகிவிட்டது!

### சர்வதேச ஸ்ரற்.:.போர் நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அனைத்துலக போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான ஸ்ரற்.:.போர் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் கருணாவைப் பயன்படுத்தி இயக்க உறுப்பினர்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவது, அவர்கள் மத்தியில் மோதல்களைத் தோற்றுவிப்பதுடன் இந்த சூழ்நிலை தொடரும் வேளையில், தருணம் பார்த்து போரை ஆரம்பிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது என்றும் ஸ்ரற்.:.போர் நிறுவனம் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

போர் நிகழ இருப்பதை முற்கூட்டியே அறிவிப்பதில் நிபுணத்துவம் பெற்ற இந்த நிறுவனம், இலங்கையில் மீண்டும் போர் இடம்பெறுவது தவிர்க்க முடியாத நிலையை எட்டியிருக்கிறது

(12ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விசேட படை தாக்கி கருணாவின் முக்கிய சகா மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காட்டுப்பகுதியில் நிலைகொண்டு தேடுதல் நடாத்தி வரும் விடுதலைப் புலிகளின் விசேட படையணியினர், கருணாவின் குழுவொன்றை நோக்கித் தாக்குதல் நடாத்தியதில், கருணாவின் மிக முக்கிய சகா ஒருவர் இறந்ததுடன், இன்னும் இருவர் படுகாயமடைந்துள்ளதாக தமிழ்நெற் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்குச் செல்லும் வீதியின் தெற்குப் புறமாக இடம்பெற்ற இத்தாக்குதலில் கருணாவின் விசேட குழு சம்பந்தப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் கூறினர். இதைத் தொடர்ந்து, இப்பகுதியில் சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்டுள்ள புலிகள், கருணா குழுவினரின் தடயங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு-பொலநறுவை எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை இராணுவ முகாமிலிருந்தே கருணாவின் விசேட குழுவினர் சதி வேலைகளுக்காகக் காட்டு வழிகளைப் பயன்படுத்தி வருவதாகவும் தமிழ்நெற் இணையத் தள்ம் தெரிவித்துள்ளது (இ-5)

# யுத்தத்தை எதிர்கொள்வதற்கு இராணுவமும் கடற்படையும் தயார்!

### இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட அறிவிப்பு

(நமது நிருபர்)

**கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவத்தினருடனான சந்திப்புக்களைத் துண்டித்திருப்பது அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதில் தடைகளை ஏற்படுத்தியிருப்பதாகவும்,**

**இதனால் யுத்தமொன்று மீண்டும் நாட்டில் ஏற்படுமாக இருந்தால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவம் தயாராக இருப்பதாகவும் புதிய இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.**

லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத் தளபதி

கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்ற இப்பத்திரிகையாளர்

கள் இராணுவத்தினருடனான வழமையான சந்திப்புக்களை

## ஆயுதம் வைத்திருந்த பெண் விசாரணையின் பின் விடுதலை

(மட்டக்களப்பு)

தேசவிரோதிகளால் வழங்கப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளம் பெண் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு நேற்று விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு குறுமண்

இரண்டு, கையடக்கத் தொலைபேசி ஒன்று, கைத்துப்பாக்கி ரவைகள் என்பன இவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டன.

இதேவேளை தமிழ்த் தேசியத்துக்கு எதிராக செயற்படும் தேச விரோதச் சக்திகள் பொது மக்களை தவறான வழியில் பயன்படுத்த முனைகின்றன.

லெப்டினனட் ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத் தளபதியாக பதவியேற்றுக் கொண்ட பின்பு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியை நேற்று சந்தித்து இராணுவத்தின் பலமான நிலை குறித்து கலந்துரையாடிய பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியும் கலந்து கொண்டார். இப்பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்திருப்பதாவது,

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இராணுவத்தினருடனான வழமையான சந்திப்புக்களை தவிர்த்து வருவத்னால் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முட்டுக் கட்டை நிலை தோன்றியுள்ளது.

கிழக்கு மாகாண்த்தில் இச் சந்திப்புக்கள் நடைபெறாவிட்

(12ம் பக்கம் பார்க்க)

செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு குறுமண் வெளியைச் சேர்ந்த குணம்-மிருதி (வயது19) என்பவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டவராவார்.

தேசவிரோதிகளின் தவறான வழி நடத்தலால் இவரிடம் வழங்கப்பட்டிருந்த கைக்குண்டுகள்

பொது மக்களை தவறான வழியில் பயன்படுத்த முனைகின்றன. இவ்வாறான சக்திகளுக்கு துணைபோகாது தவிர்த்து நடக்க வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் அறிவுரை கூறி அப் பெண்ணை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். (இ-5)

# ஆட்டோ – சைக்கிள் விபத்து வயோதிபர் ஸ்தலத்தில் பலி

## கல்வியங்காட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இச்சம்பவம் நேற்று மாலை 4மணிக்கு கல்வியங்காடு சட்டநாதர் கோயிலுக்கு முன்பாக இடம்பெற்றது.

இராமலிங்கம் வீதி கல்வியங் காட்டைச் சேர்ந்த சிறிராமலிங்கம்(வயது 62) என்ற வயோதிபரே மரணமானவராவார். 5பேரை ஏற்றிக்கொண்டு சென்ற ஆட்டோ வயோதிபரை மோதியது. இதன் போது வயோதிபர் ஸ்தலத்தில் பலியானார்.

வயோதிபரை மோதிய ஆட்டோ மதிலுடன் மோதிக் கொண்டது. அதில் பயணம் செய்த அனைவரும் படுகாயமடைந்து யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த உரும்பிராயைச் சேர்ந்தவர்களான ஆர்.உதயசுதன்(வயது 36), புஸ்பலதா(வயது 39), எம்.சுபாசினி (வயது 25),கு.சிந்துஜா(வயது 07), உசெந்தூரன்(வயது 05) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. (ச-19,51)


# நீதிமன்ற வளாக கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை பிரதம நீதியரசர் நாட்டினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா யாழ் மத்திய கல்லூரிக்கு சமீபமாகவுள்ள பழைய நீதிமன்ற வளாகத்தில் யாழ் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

முன்னதாக நேற்றுக்காலை 8.30 மணியளவில் பலாலி விமானநிலையத்தை வந்தடைந்த பிரதம நீதியரசர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து யாழ் மேல் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு பொலிசாரினால் செங்கம்பள

(12ம் பக்கம் பார்க்க)



நேற்று யா[illegible] பிரதம நீதியரசர் சரத் என் சில்[illegible]மயத் தலைவர்க[illegible] வணக்க[illegible] தெரிவிப்பதை படத்தில் [illegible]டங்கள் 2ம் பக்கத்தில்...


அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள் தமிழ்மொழியும் இலக்கியமும்–1
ஆக்கம்:
சி.சிவகாந்தினி
ஆசிரியர்

# நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டல் காட்சிகள்



பிரதம நீதியரசருக்கு செங்கம்பள வரவேற்பு





பிரதம நீதியரசர் நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்கிறார்.





வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் சரத் என் சில்வா மங்கள விளக்கேற்றுகிறார்.

அணிவகுப்பு, மாலை வரவேற்பு



நீதி அமைச்சின் செயலாளர் ஹம்லத் உரையாற்றுகிறார்.

# இவள் எங்கள் தாய்

## தாயினும் நல்லதோர் தாயகம்

ஒரு தாய் தன் பிள்ளைக்கு எவ்வளவு அன்பினை எந்தெந்த வகையில் வழங்கமுடியுமோ அந்தளவிற்கு மேலாக தாயினும் சாலப்பரிந்து உவந்து செய்கின்றது தாயகம். இவ்வில்லத்தினை ஆரம்பித்து முற்று முழுதாகத் தன் சொந்த செலவிலேயே நடாத்தி வருகின்றார் பரோபகாரி சிறிதரன். அரண்மனை போன்ற அழகும் வசதிகளும் கொண்ட தாயகம் சைவ வாழ்வுதனைத் தன் செல்வங்களுக்குத் தருகின்றது தாயகம். இந்தத் தாயகத்தை தன்னலம் கருதாது நடாத்துபவர் சிறிதரன். இவரது இந்த உயர்ந்த சேவைக்கு அவரது மனைவியும் உறுதுணையாக இருக்கிறார். சிறிதரனது குடும்பமே தாயகத்தினை தன்குடும்பமாகக் கொண்டு வாழ்கின்றது. இந்த தியாகச் செம்மல்களின் அரவணைப்பில் தாயகச் சிறுவர்கள் மகிழ்ந்து வாழ்கிறார்கள். இச்சிறுவர்களது கல்வி மேம்பாட்டிற்காக படித்த இளைஞர்களை ஆசிரியர்களாக பணிக்கமர்த்தியது குறிப்பிடத்தக்கதாகும். பட்டதாரிகளும் பயிற்சி பெற்றவர்களும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர். உணவு சமைத்தல், சிறுவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்தல் என்பதற்கு சேவையாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். காத்திரமான சைவ சத்துணவு பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. அதிகாலை 5 மணிக்கு நித்திரை விட்டெழுவது முதல் இரவு நித்திரைக்குப் போகும் வரை சிறுவர்களை மேற்பார்வை செய்யவும், வழிகாட்டவும், சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாளாந்தம் மாலை வேளைகளில் சிறுவர்களைச் சந்திப்பது, பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்ப்பது என்பதில் சிறிதரன் ஒருபோதும் தவறியதே கிடையாது. இவருக்கு துணையாகப் பக்கபலமாக வைத்திய கலாநிதி கமலநாதனும், மகேந்திரன் அதிபரும் செயற்பட்டு வருகின்றனர். திக்கற்ற இச்சிறுவர்களை அரவணைத்து அறிவூட்டி நாளைய நல்ல பிரஜைகளாக மாற்ற பணிபுரியும் சிறிதரன் அவர்களின் பணி சிவப்பணியேயாகும். தாயகம் தளைத்தோங்கவும், சிறிதரன் சீரும்சிறப்பும் பெறவும் ஆண்டவன் அருள் புரிவாராக.

நன்றியுடன்
ஆசிரியை பபி.

**நிறுவுனர், தலைவர்** - திரு வெ. சிறிதரன்
உரிமையாளர் - சிறிஅமலா ஜுவல்லர்ஸ், சிறிராம் ஜுவல்லர்ஸ்
கொனிக்கா - சிறி டிஜிற்றல் நிறுவனம்.
**பிரதித்தலைவர்** - வைத்திய கலாநிதி ஏ.கமலநாதன்
**செயலாளர்** - சுடர் இ.மகேந்திரன்
(முன்னாள் அதிபர் பிரதிக்கல்விப் பணிப்பாளர்)
**பொருளாளர்** - திரு. என்.சிறிரங்கநாதன்
(முன்னாள் விலை மதிப்பாளர்)
**குழுஉறுப்பினர்** - முன்னாள் நீதிபதி திருநாவுக்கரசு
பதிவாளர் ந. சதாசிவ ஐயர்

நாளாந்த செயற்பாடுகளைக் கவனிக்கும் குழு-
1. தலைவர் 2. பிரதித் தலைவர் 3. செயலாளர்

தாயகத்தின் நாளாந்த செயற்பாடுகள்-
1 காலை, மாலை பிராத்த்தனை
2 காலை யோகாசனம், மாலை விளையாட்டு
3. இரவு - கற்றல் செயற்பாடுகள்

வாராந்தம் - ஒவ்வொரு ஞாயிறு மாலை-




## எமது செயற்பாடுகள்

தனியொருவருக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று குமுறி எழுந்தவன் புரட்சிக்கவி, அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது சிறந்ததாகும் என்பதும் சான்றோரின் கருத்து தான். இவையிரண்டையும் கொண்டது தான் தாயகம். இருக்க நல்ல வீடும், உடுக்க நல்ல துணியும் நேரத்திற்கு உணவும் அடிப்படைத்தேவைகளாகும். இவைகள் இல்லாதபோது "கல்வி"யின் கதியென்ன? ஒழுக்கத்தின் நிலையென்ன? இவை யதார்த்தமான கேள்விகளே! பாதுகாப்பு உணர்வு சிறுவர்களுக்கு மிகவும் அவசியமானது. அன்பும், அரவணைப்பும் அத்தியாவசியமானவை. இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் சிறிதரன் அவர்கள் தாயகத்தினை உருவாக்கினார்.

தனது சொந்தச் செலவில் சிறுவர் வாழ்வகத்தை ஆரம்பிப்பது என்ற முடிவைத் துணிவாக எடுத்தார். ஆரம்பிப்பது என்பதோடு அமையாது அதனைத் தொடர்ந்து நடத்துவதற்கு தேவையான நிலையான திட்டங்களையும் செயற்பாடுகளையும் உருவாக்கியது சிறிதரனின் தனிச் சிறப்பாகும். தாயகத்தின் ஸ்திரதன்மையை உறுதிசெய்தது அவரது விடா முயற்சி தான் எனில் மிகையாகாது. தாயகம் எவ்வாறு இயங்கவேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்தது குறிப்பிடத்தக்கதாகும். எத்தகைய சிறுவர்களைச் சேர்ப்பது, சேர்க்கும் முறை என்பன நன்கு பரிசீலிக்கப்பட்டே முடிவு செய்யப்பட்டது. நாளாந்த இயக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் நன்கு திட்டமிடப் பட்டது. பல்துறை வல்லநர்களைக் கலந்தாலோசித்த பின்னரே இத்தகைய முடிவுகள் எடுக்கப்பட்டன.

தாயகத்தின் செயற்பாடுகளை வழி நடத்த பணிப்பாளர் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

பஜனை மாணவரின் நற்சிந்தனை வழிகாட்டல் பேச்சு.மாணவத் தலைவர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது
மாணவத்தலைவியாக செல்வி சு. மேரிஜான்சி
மாணவத்தலைவன்- செல்வன் தயாபரன்
மாணவர் கற்கும் பாடசாலைகள்:
யா/இந்து மகளிர் கல்லூரி - ஆரம்பப்பாடசாலை
யா/இந்துக் கல்லூரி - ஆரம்பப்பாடசாலை
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி
சிறுவர் தொகை - 60
ஆசிரியர் - 06
சேவையாளர் - 06
பாதுகாப்பு உத்தியோகத்தர் - 1
மாதச்செலவு -
சராசரி ரூபா ஒன்றரை இலட்சம்.
முதலீடு - நான்குகோடி ரூபா

### பாரதி பாடல் படி வாழும் சிறுவர்கள்

தாயகம் பாரதியாரின் பாப்பா பாட்டிற்கு இலக்கணமாகத் திகழ்கின்றது. எமது அன்பிற்குரிய சிறி மாமா எமக்குச் செய்து தரும் வசதிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். காலை எழுந்தவுடன் கவனிப்பும், பகலில் பாடசாலைக் கல்வியும் இரவில் கல்விப் போதிப்பும் மாலையில் விளையாட்டும் ருசியான சாப்பாடும் எங்கள் தங்க மாமாவின் நன்கொடையாகும். கல்வி கற்பிக்க ஆசிரியர்கள், சுகநலம் பார்க்க டொக்டர் மாமா, வழிகாட்ட அதிபர் மாமா, உதவிகள் செய்ய அன்ரி மார்கள், பாதுகாப்பிற்கு ஐயா - இப்படி எம்மை கண்ணை இமை காப்பது போல் காத்து வருகின்றது தாயகம். தீபாவளி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற திருநாட்களில் புத்தாடைகள் ஆசையறிந்து இனிப்பு வகைகளும், ஐஸ்கிறீம் என தயங்காது தருவார். இப்படி எம்மீது அன்பைச் சொரிபவர் சிறிமாமா. திகழும் தாயகம் அதனது சேவை மேலும் பலருக்குக் கிடைக்க வேண்டும் என்பதே எனது ஆசை.

- ச. மேரி ஜான்சி
மாணவத் தலைவி தாயகம்.

எதிர்காலத் திட்டம் இராசவீதியில்
புதிய "தாயகம்"

1. பரப்பளவு - 40 நிலப்பரப்பு
2. ஆண், பெண்களுக்கான தனி விடுதிகள்
3. கற்றல் - அறைகள்
4. கணனி உள்ளடக்கிய கல்வி மையம்
5. உணவு மண்டபம் , சமையல் அறை
6. சேவையாளர் அறைகள்
7. விளையாட்டு மைதானம்
8. நூலகம்
9. கோயில்

இந்த பிரமாண்டமான திட்டத்தை திரு.வெ.சிறிதரன் ஆரம்பித்துள்ளார். மாதச் செலவுகளையும் முதலீடுகளையும் அவரது சொந்த செலவிலேயே சிறிதரன் செய்து வருகின்றார். அவரது 'சிவபணி' 'சமூகசேவை' மிகுந்த தன்னடக்கத்தோடு செய்யப்பட்டு வருகின்றது.

வைத்திய கலாநிதி கமலநாதன் - பிரதித் தலைவர்
சுடர் - இ.மகேந்திரன் - கௌரவ செயலாளர்

**தாயகம் (சிறுவர் வாழ்வகம்)**
**பொற்பதி வீதி, கோண்டாவில்.**

## இன்று ஒரு தகவல்

### அச்சுக் கலையின் ஆரம்பம்

"ஐயா! எனது நூல் வெளியீட்டு விழாவுக்கு நீங்கள் அவசியம் வரவேண்டும்" என்று கூப்பிட்டார் ஒருவர். " எப்போது வரவேண்டும்?" என்று கேட்டேன். "அடுத்த வாரம்" என்றார்.சரி...புத்தகம் தயாராகி விட்டதா? " என்றேன். "நாளைக்குத் தான் அச்சுக்கே கொடுக்கப் போகிறேன்" என்றார். " என்ன இது புத்தகம் அச்சடிப்பதற்கு முன்பே அழைப்பிதழை அச்சடித்து விட்டீர்கள்?" என்று கேட்டேன். அதனால் என்ன? அந்தக் காலம் மாதிரியா... இப்போதெல்லாம் அச்சுக்கலை எவ்வளவோ முன்னேறி விட்டது.

லைனோ டைப் மோனோ டைப்போட்டோ டைப் செட், லேசர் இப்படி என்னென்னமோவெல்லாம் வந்து விட்டது. இன்று கொடுத்தால் நாளைக்கே புத்தகம் தயார்" என்றார்.

இப்படி இந்த அளவுக்கு முன்னேறியிருக்கும் இந்த அச்சுக்கலை ஆரம்பத்தில் எப்படி இருந்தது தெரியுமா? அந்தக் காலத்தில் காகிதம் என்றால் என்னவென்றே தெரியாது.அப்படி ஒன்று கண்டுபிடிக்கப் படவே இல்லை. அப்போதெல்லாம் ஏதாவது ஒன்றை எழுத வேண்டுமானால் அதற்கு ஆட்டுத்தோலைத் தான் பயன்படுத்துவார்கள். கன்றுக் குட்டியின் தோல் கூட அதற்கு உபயோகப்பட்டதாம். ஐரோப்பாவில் இருந்த பாதிரியார்கள் தோலில் எழுதப்பட்ட புத்தகத்தைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தனராம்.

எகிப்து மத்தியதரைக் கடல் ஓரத்தில் உள்ள நாடுகள் இங்கெல்லாம் தோல்தான் எழுது பொருளாகப் பயன்பட்டு வந்தது. ஆனால் நமது நாட்டில் ஓலைச் சுவடிகளை எழுதப் பயன்படுத்தினார்கள். எழுதுவதற்குத் தோலைப் பயன்படுத்தியவர்கள் பின்பு பேபரைஸ் எனும் கோரைப் புல்லை அதற்குப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

அந்தப் புல்லைக் கச்சிதமாக நறுக்க வேண்டியது. நன்கு பதப்படுத்த வேண்டியது. அதன்பின் அதில் எழுத வேண்டியது. அவ்வளவு தான் பேப்பர் என்ற சொல்லே 'பேபரைஸ்' என்பதிலிருந்து தான் வந்தது. அதன் பின் தான் காகிதம் வந்தது. இதை முதலில் சீன நாட்டில் தான் கண்டுபிடித்தார்கள்.

காகிதம் வந்த பின்பு அச்சு இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதைக் கண்டுபிடித்தவர் ஜேர்மனின் அறிவியல் அறிஞர் ஜோன் கூட்டன் பாக் அச்சுக் கலைக்கு அடித்தளம் அமைத்தவர் அவர் தான். ஜேர்மனியில் மெயின்ஸ் எனும் ஊரில் 1399 இல் பிறந்தார். அவரது மாமா ஒருவர் உலோக வேலையில் வல்லவர். அவரிடம் அந்த வேலையைக் கற்றுக் கொண்டார். அதோடு வைரக் கற்களைப் பட்டை தீட்டுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இளம் வயதிலேயே சும்மா இருக்கமாட்டாராம். எதைச் செய்தாலும் அதைத் திறமையாகச் செய்வாராம்.

அவர் தான் முதலில் மர அச்சு எழுத்துக்களை உருவாக்கினார். அதன்மேல் மைதடவிப் பிரதிகள் எடுத்தார். அதன்பின் உலோக எழுத்துக்கள், முதலில் காரீயம், அதன் பின் இரும்பு,அதன் பின் கலப்பு உலோகம். பிறகு அச்சடிப்பதற்கு இயந்திரம் ஒன்றையும் உருவாக்கினார். முதலில் பைபிளை அச்சடித்தார். 1468 இல் அவர் இறந்து போனார். 16ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளிலிருந்து மர எழுத்துக்களைக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் கிறிஸ்தவ நூல்களை அச்சடித்தனர்.

அப்போதெல்லாம் அச்சகங்கள் போதியளவு இங்கு இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால் இந்தியர்கள் அச்சகங்களை நடத்தக் கூடாது என்பது சட்டம். 1835 வரைக்கும் அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தது. இந்த நிலையில் ஒன்றிரண்டு அச்சகங்கள் அங்குமிங்கும் ஆரம்பமானது.

1713இல் தரங்கம்பாடியல் லூதரன் மிஷன் அச்சகம், அதே ஆண்டில் சென்னையில் எஸ். பி.சி.கே அச்சகம் இவையிரண்டும் தான் இந்தியாவில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட அச்சகங்கள்.ஆட்டுத்தோலிலும், ஓலைச் சுவடியிலும் எழுதப்பட்ட எழுத்துக்கள். இன்று நாம் எங்கேயோ போய்விட்டோம். ஆனால் நமது ஊரில் எழுத்தாளர்களின் நிலைமை தான் ஒன்றும் சொல்லிக் கொள்வது போலில்லை.

நமது ஆள் ஒருவர் சொன்னார் " சார்! நான்சொந்தத்தில் ஒரு அச்சு அலுவலகம் வைத்திருக்கிறேன். அதனால் எனது படைப்புக்களை புத்தகமாக வெளியிடுவதில் எனக்கு ஒன்றும் கஸ்டமில்லை.வருடத்திற்கு ஒரு புத்தகம் வெளியிடுவேன். 15 வருடமாக இலக்கிய உலகிற்கு இப்படிச் சேவை செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் இந்த வருடம் தான் வாசகர்கள் எனக்குப் பாராட்டுவிழா நடத்தினார்கள்" என்றார். " இந்த வருடம் அப்படி என்ன விசேஷம்?" என்றேன். "இந்த வருடம் தான் நான் எந்தப் புத்தகமும் எழுதி வெளியிடாமல் இருந்தேன்! அதற்காகத்தான் இந்தப் பாராட்டுவிழா" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கூட்டமைப்புக்கு உள்ள உரிமையை தடுப்பதற்கு ஜே.வி.பி.க்கு அருகதை இல்லை

### வன்னி எம்.பி. சீற்றம்

(வவுனியா)

தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டு வரும் கருத்துக்களை, கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கண்டித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க வழங்கியுள்ள செவ்வியொன்றின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத்தில் இருந்து விரட்டவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் தலைவரின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக விளக்கமளித்துள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டமைப்பு தொடர்பாக ஜே.வி. பி. தெரிவித்து வரும் இத்தகைய விசமத்தனமான கருத்துக்களின் மூலம் தம்மை மீண்டும் ஆயுதமேந்திப் போராடுங்கள் எனத்தூண்டுவது போல் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் தரப்பின் பிரதான பங்காளிகளாக தற்போது செயற்பட்டு வரும் ஜே.வி.பி., முன்னர் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மைப் பொறுத்த வரையில், மக்களின் உரிமைகள் அனைத்தும் பறிபோன பின்னர், அஹிம்சை வழியில் போராடி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதையடுத்தே, ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை தோற்றுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இன்று ஜே.வி.பி.இலங்கை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்த வண்ணம், தமிழத் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான விசமத்தனமான கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகவும், இத்தகைய கருத்துக்களை அந்தக் கட்சியினர் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

அத்துடன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வடக்கு-கிழக்கின் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டே நாடாளுமன்றம் சென்றுள்ளதாகவும், அவ்வகையில் அவர்களை வெளியேறக் கூறுவதற்கு சோமவன்ச அமரசிங்கவுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசத்தி ஆனந்தன் மேலும் தெரிவித்துள்ளார்..

இதேவேளை, இலங்கையில் அவசரகால நிலையை உடனடியாக அமுல்படுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுப்பது நியாயமற்றதென தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ_121)

## பாதிக்கப்பட்ட 80 குடும்பங்களுக்கு வீடு கட்ட தலா 2 பரப்புக் காணி

(பருத்தித்துறை)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேசத்தில் தஞ்சமடைந்திருந்த 80 குடும்பங்களுக்கு கற்கோவளம் புனித நகரில் தலா .2 பரப்புக் காணி வீதம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதன் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இக் குடும்பங்களை இக்கிராமத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான மூலப் பொருட்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வழங்கவுள்ளதுடன் சுய உதவி முயற்சியில் இவ் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

தும்பளை லூர்த்து மாதா முகாம், தும்பளை இலட்சுமணன் தோட்ட முகாம், கற்கோவளம் முகாம் ஆகியவற்றில் இக்குடும்பங்கள் இதுவரை கஷ்ட வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளன.

இவர்களுக்கு குடிநீர்வசதிகள், சுகாதார வசதிகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளுக்காக புனித நகருக்குச் செல்லும் ஆனைவிழுந்தான் வீதியும் திருத்திப் புனரமைக்கப்படவுள்ளது. (உ_-52)

## இராசி பலன்

**15.07.2004**
**(ஆனி 31, வியாழக்கிழமை)**
**திரயோதசி பிற்பகல் 01.39 மணி வரை**
**மிருகசீரிடம் பி.ப 4.56 மணி வரை**
**இராகுகாலம் 1.30-3.00 மணி வரை**
**சுபநேரம் 7.30-9.00 மணி வரை**

**மேடம்**
சுவாரஸ்யம், உறவினர் வருகை, நல்ல காரியம், போசன நன்மை.

**இடபம்**
மாதர் நட்பு, கோபப்படுதல், காரியதாமதம், பணவிரயம்.

**மிதுனம்**
சயன சுகம், சிந்தனை மிகுதி, பிரயாணம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
பிரயாண அலைச்சல், வாக்கு மேன்மை, அதிக பிரயாசை, பணவிரயம்.

**சிங்கம்**
பெருமையடைதல், தொழில் வருமானம், எடுத்த கருமங்கள் கைகூடும், மனமகிழ்ச்சி.

**கன்னி**
நல்ல செய்தி, தொழில் நன்மை, பிரயாணம், பிறர் ஒத்துழைப்பு.

**துலாம்**
எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
பிரயாணபயம், அபகீர்த்தி, உடல்நலக்க்குறைவு, முயற்சி தடங்கல்.

**தனுசு**
போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, நல்ல செய்தி.

**மகரம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல்நலம், மனமகிழ்ச்சி, தொழில்சிந்தை.

**கும்பம்**
வியாபார நன்மை, சொத்துப்பிணக்கு, காரியதாமதம், தாழ்ந்த சுபாவம்.

**மீனம்**
ரோகநிலை, புதிய விடயம், கல்வியில் ஆர்வம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வள்ளுவன்

## மாகாணசபை வெற்றி குறித்து ஆர்ப்பரிப்பதில் அர்த்தமில்லை

### பந்துல பரிகாசம்

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு வெற்றி பெற்றுள்ளது என ஆர்ப்பரிப்பதில் எந்தவித அர்த்தமுமில்லை.

ஏனெனில் இந்தத் தேர்தலில் 50 சதவீதமானவர்களே வாக்களித்துள்ளார்கள். வாக்களிக்காத ஏனையவர்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பது தான் உண்மை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றிக் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தலில் எமது கட்சி தோல்வியடைந்தது உண்மை தான். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்தத் தேர்தலை பொதுத் தேர்தல் வடிவத்திலேயே நோக்கியது.

தமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்ல ஆகக் கூடிய மக்கள் ஆணையை வழங்குமாறு முன்னணியினர் கோரினார்கள்.

ஆனால் அவர்கள் கோரிய விதத்திலான மக்கள் ஆணை கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் 50 வீதமானவர்கள் வாக்களிப்பில் ஈடுபடவில்லை.

அதுமட்டுமன்றி இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இடம்பெற்ற தேர்தல்ளில் இம் முறையே குறைந்த சதவீத வாக்களிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (உ_-10)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையை பிற்போடுக!

### சைவபரிபால்னசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ் வருடத்திற்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையை பின்போடுமாறு யாழ்ப்பாணம் சைவப்பரிபாலனசபை கேட்டுள்ளது.

இது குறித்து சபையின் செயலாளர் பரீட்சை ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை மிக நீண்டகாலமாக ஆடி , ஆவணி மாதங்களில் நடைபெற்று வருகின்றது. இப்பரீட்சையால் நாட்டில் உள்ள அனைத்து 10 வயது மாணவர்களும் இன, மத, மொழிக்கு அப்பால் நன்மை பெற்று வருகின்றனர். இப்பரீட்சை செவ்வனே நடைபெற எமது ஆதரவு என்றும் உண்டு.

இம்முறை பரீட்சை 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய நாள் ஆடி அமாவாசை தினமாக அமைந்துள்ளது.

ஆடி அமாவாசை சைவ மதத்தவர்களுக்கு மிகப் புனிதமான ஒரு நாள். இறந்த தந்தையை நினைத்து பிதிர்க்கடன் செய்யும் தினமாகும். புலமைப்பரிசில் பரீட்சை மேற்பார்வையாளர்களாக பணியாற்றும் பெருந்தொகையான சைவ சமய ஆசிரியர்களும் அதிகாரிகளும் தந்தையை இழந்தவர்களாக இருக்கலாம். அதேபோன்று பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிலும் தந்தையை இழந்த சைவ மாணவர்கள் இருக்கலாம்.

இவர்கள் பிதிர்க்கடன் நிறைவு செய்து விரதம் அனுட்டிப்பதற்கு வசதியாக இப்பரீட்சையை 22.08.2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்போடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (உ)

# ஒழுக்கத்தை மதிக்கின்ற யாழ். மக்களுக்கு சிறந்த நீதிச் சேவையை வழங்குவது அவசியம்

## யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா உரை

(யாழ்ப்பாணம்)

**சட்டம், நீதி,கலாசாரம்,பண்பாடு ஆகியவற்றை மதிக்கும் நல் ஒழுக்கமுள்ள யாழ். குடாநாட்டு மக்களுக்கு சிறந்த நீதிச் சேவையை வழங்கக் கூடிய கட்டமைப்புக்களுடன் கூடிய நீதிமன்றம் ஒன்று அவசியம். இதனை உணர்ந்தே யாழ்ப் பாணத்தில் நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.**

இவ்வாறு நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ். நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட பின் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற வரவேற்பு உபசார வைபவத்தில் பிரதமவிருந்திரனராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 1969 ஆம் ஆண்டு நான் முதல் தடவையாக யாழ். குடாநாட்டிற்கு வந்த போது இங்கு எழில்மிக்க கட்டடங்களின் தோற்றங்களையும் இயற்கை அழகையும் பண்பாடு, நாகரிகம், அறிவியல் விழிப்புணர்வு நிறைந்த மக்கள் கூட்டத்தைக் காண முடிந்தது.

ஆனால் சில தசாப்தங்களின் பின் இன்று யாழ். குடாநாட்டைப் பார்க்கையில் மிகவும் வேதனையாக உள்ளது. காரணம் யுத்தத்தால் இடிந்து போன கட்டடங்களையும், சீரழிந்து போன மக்களின் வாழ்வியலையுமே இங்கு காணமுடிகிறது.

கலாசாரம் ,பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றிற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய யாழ்ப்பாணம் மீண்டும் புதுப்பொலிவுடன் உருப்பெற வேண்டும் என்பதுவே எல்லோருடைய விருப்பமாகவும் இருக்கிறது.

யுத்தம் காரணமாக அழிந்து போன குடாநாட்டு மக்களின் வாழ்வியல் ஒழுக்கங்களை உறுதி செய்து கொள்வதற்கு இங்கு சிறந்த நீதிச் சேவையை மக்களுக்கு வழங்கக் கூடிய கட்டமைப்புகளுடனான நீதிமன்ற அமைப்புக்கள் முக்கியமானது.இதனை உணர்ந்தே 8 வகையான நீதிமன்ற அமைப்புகளுடன் கூடிய நீதிமன்ற வளாகம் ஒன்றை அமைக்க நாம் திட்டமிட்டு அதனை நடைமுறைப் படுத்தி வருகிறோம்.

அந்த வகையில் 195 மில்லியன் ரூபா செலவில் சுமார் 4 ஆயிரத்து 500 சதுர அடி பரப்பளவு கொண்ட நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் இன்று நாட்டப்பட்டுள்ளமையை ஒரு வரலாற்று நிகழ்வாகவே நான் கருதுகிறேன். இது யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் சிறப்பான ஒரு மாற்றத்தைத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

18மாத காலத்தினுள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ள இந் நீதிமன்ற கட்டட நிர்மாணப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தினுள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினை அமைக்கவும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனினும்அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அமைவாக இதற்குரிய அங்கீகாரம் கிடைத்ததுமே மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் சேவைகள் இங்கு இடம்பெறும்.


வடக்கு -கிழக்குக் பிரதேசங்களில் சட்டமும்,நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுள்ளவனாக இருக்கிறேன். இதில் எவ்விதமான உள்நோக்கங்களும் கிடையாது.

நான் ஓர் அரசியல்வாதி அல்ல சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளேன்.

நீதித்துறை வேறு, அரசியல் வேறு என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளுவது அவசியம். நீதியின் ஆட்சி நாடெங்கிலும் நிலைபெற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

(உ-4,19)





வடமராட்சி கிழக்கு குடத்தனைப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள முதியோர் பகல் நிலையத்திலுள்ள வயோதிபர் ஒருவருக்கு குடத்தனைப்பகுதி பிறப்பு,இறப்புப் பதிவாளர் க. ஆனந்த மூர்த்தி உணவுப்பொட்டலம் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். ( படம் சு. கணபதிப்பிள்ளை)

## மத உறவை வலியுறுத்தி மன்னாரில்பேரணி

(மன்னார்)

கிறிஸ்தவ -இந்து மக்களிடையே நல்லுறவை வளர்க்கும் முகமாகவும் அதனை வலியுறுத்தியும் மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் காலை 'பேரணியொன்றை நடாத்தியுள்ளனர். அமைதியாக நடைபெற்ற இந்தப்பேரணிக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கினர். இதில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

கிறிஸ்தவ இந்து மக்களிடையேயான நல்லுறவை வலியுறுத்தி மனுவொன்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தி.விஸ்வலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது. (உ-18,61 )

## தற்கொலைக் குண்டுதாரி குறித்து
## சி.ஐ.டி. குழுவினரால் யாழிலும் விசாரணை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை சி.ஐ.டியினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து விஷேடமாகத் துப்புத் துலக்கி வரும் சி.ஐ.டியினர் தற்கொலைக் குண்டுதாரி வெடிக்க வைத்த குண்டு எல்4 ரகத்தைச் சேர்ந்தது என அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் தற்கொலைக் குண்டுத்தாரி பற்றிய மேலதிக புலன் விசாரணைகளை நடாத்துவதற்கு விரைவில் சி.ஐ.டி. குழுவினர் யாழ்ப் பாணம் வரவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(உ-18)




மக்கள் வங்கி சீங்கானைக் கிளையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில், முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# சுமார் 300 கலைஞர்கள் பங்கேற்கும் பாரம்பரிய கிராமியக் கலை ஊர்வலம்

## நல்லூரில் ஞாயிறன்று நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா நாளை வெள்ளிக் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையான 3 தினங்கள் இடம்பெறவுள்ளது.

முதலாம் இரண்டாம் நாள் நிகழ்வுகள் பி.ப. 3 மணி முதல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா தலைமையில் இடம்பெறும் முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலைஞர்களை மகுடம், பொன்னாடை,மாலை அணிவித்து பட்டம் சூட்டிக் கௌரவித்தலும் இசை நாடகப் போட்டியில் வெற்றி பெற்றோர்க்குப் பதக்கம்-விருது வழங்கலும் கலை நிகழ்வுகளும் வெற்றி பெற்ற நாடக ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு கழக உறுப்பினர் சி. தாசீசியஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,கலாசாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என். சிறிதேவி, தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு. ஜெயராஜ், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு,நாட்டுக் கூத்துப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெற்றவர்களுக்கு விருது வழங்கல்,இசை நாடகங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மூன்றாம் நாளன்று பிப 3 மணிக்கு சுமார் 300 பாரம்பரிய கலைஞர்களை உள்ளடக்கிய கிராமியக் கலை பண்பாட்டு ஊர்வலம் நல்லூர் சட்டநாதர் கோயில் வாசலில் ஆரம்பித்து பருத்தித்துறை வீதி வழியாக முத்திரைச் சந்தியை அடைந்து நல்லூர் கோயில் வாச்லைச் சென்றடையவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு- கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ். மாநகரசபை ஆணையாளர் இ. இராமலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூன்றாம் நாள் மாலை நிகழ்வு 5.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கழக உப தலைவர் பேராசிரியர் இ.சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)



மக்கள் வங்கி சங்கானைக் கிளையினால் பண்டத்தரிப்பில் நீடித்த கருமபீடமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(படங்கள். இ.அருள்றோகான்)

# அபுகிரைப் சிறைச்சாலை நிலைமை சீரடைந்தது இம்சைகள் இன்றி இயல்பாய் உள்ளனர் கைதிகள்

## ஈராக் மனித உரிமைத்துறை அமைச்சர் உறுதிப்படுத்தினார்

(பக்தாத்)

கைதிகளைப் பல்வேறு கொடுமைக்குள்ளாக்கி வந்த அபுகிரைப் சிறை தற்போது சீர்திருத்தப்பட்டுள்ளதாக,ஈராக் அமைச்சர் பக்தியார் அமீன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் சதாம் ஆட்சியை வீழ்த்தி நிர்வாகத்தை கைப்பற்றிய அமெரிக்கப் படையினர் தலைநகர் பாக்தாத் அருகே உள்ள அபுகிரைப் சிறையில் கைதிகளை நிர்வாணப்படுத்தியும், மின்சாரம் பாய்ச்சியும் நாயை விட்டு கடிக்கச் செய்தும், பாலியல் பலாத்காரம் செய்தும் அவர்களின் மலஜலங்களை உண்ணச் செய்தும் பல்வேறு கொடுமைப்படுத்தினர்.

இது தொடர்பான படங்கள் சமீபத்தில் வெளிநாட்டு பத்திரிகைகளில் வெளியாயின. அமெரிக்க இராணுவத்தின ரின் இந்த செயல்களை உலக நாடுகள் கண்டித்தன. இந்நிலையில், கடந்த மாதம் ஈராக்கின் நிர்வாகத்தை உள்ளூர் தலைவர்களிடம் அமெரிக்கா ஒப்படைத்து விட்டது.

இருப்பினும், சிறை நிர்வாகங்கள் இன்னும் அமெரிக்க அதிகாரிகளிட்மே தான் உள்ளன. இது குறித்து ஈராக் மனித உரிமைத்துறை அமைச்சர் பக்தியார் அமீன் கூறியதாவது,

அபுகிரைப் சிறையில் நடந்த துயரச்சம்பவங்கள் மீண்டும் நடக்காது. வாரந்தோறும் இந்த சிறையில் கைதிகளிடம் அவர்கள் நடத்தப்படும் விதம் குறித்து கேட்டறியப்படுகிறது. முன்பு இருந்த நிலை தற்போது கிடையாது. அங்குள்ள அதிகாரிகளுக்கும்,கைதிகளுக்கும் ஒரே மாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது.

கைதிகளுக்கு நல்ல உடை கொடுக்கப்பட்டுள்ளது.கைதிகளின் உறவினர்கள் சிறைக்கு வந்து பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்

அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்திய சிரியா, ஆப்கானிஸ்தான், துருக்கி, லெபனான், சூடான், எகிப்து, ஈரான், யெமன் மற்றும் சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அபுகிரைப் சிறையில் மட்டும் வெளிநாட்டு கைதிகள் 77 பேர் உள்ளனர். முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை சர்வதேச நடைமுறைகளின் படி நடத்தப்பட்டு வருகிறது இவ்வாறு அமீன் கூறினார்.

(உ)

## வத்திக்கான் மாதா ரஷ்யா வசமாகும்

(ரோம்)

கடந்த 30 ஆண்டுகளாக வத்திக்கான் மாளிகையில் இருந்து வரும் மாதா உருவப் படத்தை ரஷ்யாவிடம் திருப்பி யளிப்பது பற்றி போப்பாண்டவர் பரிசீலித்து வருகிறார். இதன் மூலம் கத்தோலிக்கர்களுக்கும் ரஷ்ய பழைமைவாத கிறிஸ்தவர்களுக்கும் இடையே இருந்து வரும் மனக்கசப்பு நீங்கும் எனக்கருதப்படுகிறது.

ரஷ்யப் பயணம் மேற்கொள்ள வேண்டும் எனப்போப்பாண்டவர் நீண்டகாலமாக கருதி வருகிறார். அத்தகைய சந்தர்ப்பம் கிடைத்தால் வத்திக்கான் மாளிகையில் உள்ள மாதா உருவப் படத்தை ரஷ்யாவுக்கு நேரில் எடுத்துச் சென்று அளிக்கவும் திட்டமிட்டுள்ளார்.

(உ)

## இரு நாடுகளின் வரலாற்றில் தடம்பதித்த கல்பனா சாவ்லா

(நியூயோர்க்)

மறைந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவின் பெயர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஒருதெருவுக்கு சூட்டப்பட்டுள்ளது.



கொலம்பியா விண்கலம் கடந்த ஆண்டு பெப்ரவரியில் நடுவானில் வெடித்துச் சிதறியதில் கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் இறந்தனர்.

கல்பனா சாவ்லா பெயரைத் தெருவுக்குச் சூட்டி அவருக்குப் புகழாரம் சூட்டிய நியூயோர்க் நகர மேயர் மைக்கேல் புளூம் பெர்க், 'இருநாடுகளின் வரலாற்றிலும் கல்பனா இடம் பெற்றுவிட்டார்'' என்றார்.

சாவ்லா பற்றி இதற்கு முன் அறிந்திராதவர்கள் கூட இத்தெரு வழியாகச் செல்லும்போது அவரைப்பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவர். எனவே இத்தெருவுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றார் அவர்.

(உ)

## தாடி தலைப்பாகையால் தேடி வந்தது வினை

(நியூயோர்க்)

தாடியும், தலைப்பாகையும் அணிந்திருந்த சீக்கியரை முஸ்லிம் என நினைத்து குடிபோதையில் இருந்த அமெரிக்க இளைஞர்கள் தாக்கியுள்ளனர்.

ராஜிந்தர் சிங்கல்சா (54)நியூயோர்க் நகரில் வாகனச் சாரதியாகப் பணிபுரிகிறார். அவர் தனது உறவினர் குருசரண் சிங்குடன் நியூயோர்க் ரிச்மோண்ட் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அப்போது அவ்வழியே சென்ற 3 அமெரிக்க இளைஞர்கள், அவர்களைக்கேலி செய்து தலைப்பாகையைக் கழற்றுமாறு கூறி கெட்டவார்த்தைகளால் திட்டினர்.

நாங்கள் இஸ்லாமியர் அல்ல, எங்கள் மதக் கட்டளைப்படி தலைப்பாகை அணிந்துள்ளோம் என்று குருசரண்சிங் அப்போது கூறியுள்ளார்.

இதனிடையே வாக்குவாதம் முற்றி,கல்சா பயங்கரமாகத் தாக்கப்பட்டார். அவருக்கு வெட்டுக் காயங்களும் மூக்கில் எலும்பு முறிவும் ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர். எஞ்சிய இருவர் தலைமறைவாகிவிட்டனர். (உ)

## தமிழர் கலாசாரம் பற்றிய புத்தகம் தென்னாபிரிக்காவில் வெளியீடு

(டர்பன்)

தமிழர் திருவிழாக்கள் கிராம கடவுள்கள் பற்றி ஓர் புத்தகம் தென்னாபிரிக்காவில் வெளியாகியுள்ளது.

அரசு வானொலியில் இன்னிசை மழை என்ற நிகழ்ச்சியை நடத்தி வரும் மாலா லட்சுமணன் இந்தப் புத்தகத்தைத் தொகுத்துள்ளார்.

இப்போதைய இளைஞர்களிடம் மேற்கத்திய கலாசாரத்தின் தாக்கம் காணப்படுகிறது. இந்த நிலையில் இவர்களுக்கு தமிழர் கலாசாரம் என்ன, தமிழர் திருவிழாக்கள் என்ன என்பதை கற்றுத்தர வேண்டும் என்பதே தமது நோக்கம் என்றும் இதற்காகவே இப்புத்தகத்தைத் த்யாரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழர் சமுதாயம் பின்பற்றும் பல்வேறு சடங்குகளுக்கான காரணம் இந்தப்புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப் புத்தகத்துக்கான தகவல்களைத் திரட்ட தென்னாபிரிக்காவிலும் தமிழ் நாட்டிலும் பல்வேறு ஆராய்ச்சிகளை தாம் மேற்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ)

## இந்திப் படங்களுக்கு இருந்த தடையை பாகிஸ்தான் நீக்கும்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இந்திப் படங்களை திரையிட 39 ஆண்டுகாலமாக இருந்து வரும் தடையை நீக்க அந்நாட்டு அரசு பரிசீலித்து வருகிறது.

இந்தி சினிமாப் படங்கள், இந்தி நட்சத்திரங்கள் என்றால் எப்போதுமே பரகிஸ் தானியருக்கு அலாதி பிரியம்.

ஆனால், கடந்த 1965ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் வெடித்தபோது, இந்தி சினிமாக்களைப் பாகிஸ்தானில் திரையிட அந்நாட்டு அரசுதடை விதித்தது. அந்தத் தடை இன்றளவும் நீடித்து வருகிறது.

தற்போது இருநாடுகளுக்கும் இடையே உறவு மேம்பட்டு வரும் நிலையில், இந்தித் திரைப் படங்களைத் திரையிட விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என்று பாகிஸ்தானில் உள்ள திரைப்பட விநியோகஸ்தர்களும், தியேட்டர் உரிமையாளர்களும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களைக் கவரும் வகையில் பாகிஸ்தானில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதில்லை. அதனால் அப்படங்களைப் பார்க்க அவர்கள் ஆர்வம் காட்டு வதில்லை. அதற்குப் பதிலாக திருட்டுத் தனமாக வரும் இந்தி சினிமா சிடிக்களை மக்கள் அதிகளவில் வாங்கிப் பார்த்து விடுகின்றனர்.

இதற்கிடையில் இந்திப் படங்கள் மீதான தடையை நீக்குவதற்கு பாகிஸ்தான் திரைப் படத்துறையில், ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தடையை நீக்கினால்தான் கோர்ட்டில் வழக்குத் தொடருவேன் என்று பிரபல பாகிஸ்தான் சினிமா நடிகர் யூசுப்கான் எச்சரித்துள்ளார். (உ)

## வெளிநாட்டவரை விரட்டுவதில் மலேசிய அரசு விடாப்பிடி

### தேடிப் பிடிக்க புதிய படையணி

(கோலாலம்பூர்)

தனது நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள இந்தியர்கள் உட்பட 12 இலட்சம் பேரை நாட்டைவிட்டு வெளியேற்ற மலேசியா திட்டமிட்டுள்ளது. அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக சிறப்புப் படை அமைக்கப்பட்டு வருகிறது.

மலேசியாவில் பல்வேறு துறைகளில் தொழிலாளர்கள் பஞ்சம் உள்ளது. இந்நாட்டில் வேலை வாய்ப்பு அதிகமாக இருப்பதால், அண்டை நாடுகளான இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்கள் மலேசியாவில் சட்டவிரோதமாக நுழைந்து பணி புரிந்து வருகின்றனர். ஏராளமான இந்தியர்களும் இதில் அடங்கு கின்றனர்.

கடந்த 2002ஆம் ஆண்டில் இதுபோன்று 6 இலட்சம் பேரை மலேசிய அரசு வெளியேற்றியது. இங்கு பணிபுரிந்த இந்தோனேசியர்கள் மலேசிய அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து, சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை வெளியேற்ற மலேசிய அரசு இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது.

தற்போது அதேபோன்ற அதிரடி நடவடிக்கையை மலேசிய அரசு மேற்கொள்ளவுள்ளது. சட்டவிரோதமாக குடியேறியுள்ள 12 இலட்சம் பேரை அடுத்த ஆண்டு இறுதிக்குள் நாட்டைவிட்டு வெளியேற்றப் போவதாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் ஆஸ்சிகாலித் அறிவித்துள்ளார். இவர்களைக் கண்டுபிடித்து வெளியேற்றுவதற்காக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட படை உருவாக்கப்படுகிறது. சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள நிறுவனங்களுக்கும் மலேசிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. தாங்களாகவே முன்வந்து, பதிவு செய்யாத தொழிலாளர்கள் பற்றி விபரங்களை அரசுக்கு தர வேண்டும்; இல்லையென்றால் நிறு வனங்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளது. (உ)



தாய்லாந்து நாட்டில் நடக்கும் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு உலக மாநாட்டில் கலந்து கொண்ட ஐ.நா. சபை பொதுச் செயலாளர் கோபி அனானை உலக அழகி ஜெனீபர் ஹாக்கின்ஸ் சந்தித்துப் பேசினார்.

## அரைகுறை ஆடைகளை அணியும் பெண்களுக்கு அபராதம்; கசையடி

### ஈராக்கில் இப்படி ஒரு நடைமுறை

(தெஹ்ரான்)

ஈரானில் பெண்கள் நாகரிக உடை அணிந்தால் கடும் அபராதம் விதிக்கப்படுகிறது. இஸ்லாமிய பழமைவாத நாடான ஈரானில் பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரை கறுப்பு ஆடையால் மூடியபடி நடக்க வேண்டும். அவர்கள் அணிந்துள்ள காதணியோ,காலணியோ வெளியே தெரியக்கூடாது.

பழமைவாதிகள் நிறைந்துள்ள இந் நாட்டில் மிதவாத போக்குடைய முகமது கடாமி அதிபராக உள்ளார். இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் நாகரிக ஆர்வமுள்ள பெண்கள் கறுப்பு பர்தாவுக்கு பதில் கலர் பர்தாவை அணிவதும் பர்தாவுக்கு பதில் காற சட்டைகளைப் போட்டுக் கொள்வதும் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இன்னும் ஒருபடி மேலே போய், இங்கு ஆடை அலங்கார அணி வகுப்புக்களும் நடக்கத் தொடங்கியுள்ளன. இதை யெல்லாம் கண்டு பழமைவாதிகள் கொதித் தெழுந்துள்ளனர். சமீபத்தில் நடந்த பாராளுமன்ற மேலவைத் தேர்தலில் பழமைவாதிகளே அதிக இடங்களை கைப்பற்றியுள்ளனர். பெண்களின் நாகரிக உடை மோகத்தினால் கற்பழிப்புச் சம்வங்கள் அதிகரித்து வருவதாக இவர்கள் குறைகூறியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து உடை விவகாரத்தில் எல்லை மீறும் பெண்களுக்கு கடும் அபராதம் விதிக்கப்படுகிறது. இன்னும் பலர் பிரம்படிகள் வாங்குகின்றனர். சமீபத்தில் தலைநகர் தெஹ்ரானில் கார் ஓட்டிச் சென்ற பெண்ணின் தலைத் துணி காற்றில் பறந்து விட்டது. உடனடியாக அந்த பெண் ணின் காரை ஓரம் கட்டச் சொன்ன பொலிஸார்,பெரிய தொகையை அபராதம் கட்டச் சொன்னார்கள். அதுமட்டு மல்லாது இந்த குற்றத் துக்காக அந்த பெண்ணுக்கு கசையடி தண்டனையும் காத்திருக்கிறதாம். (உ)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004


தமிழ்மொழியும் இலக்கியமும் I
மணி - 1
ஆக்கம் :
சி. சிவகாந்தினி (B.A Hons)
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.


**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொற்பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(01) 'ஐயோ! இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான்'. இங்கு **"ஐயோ"** என்ற சொல் உணர்த்தும் குறிப்பு
1. அச்சம் 2. இரக்கம் 3. கோபம் 4. ஆற்றாமை

(02) 'அறத்தால் வருவதே இன்பம்' **"அறம்"** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. தர்மம் 2. வீரம் 3. மறம் 4. தெளிவு

(03) 'தாதையைக் கொன்றான் பின்னே'. இங்கு **"தாதை"** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. தாய் 2. தந்தை 3. தனயன் 4. தங்கை

(04) 'தான தர்மங்கள் செய்கின்ற பேர்களும்' **"தர்மம்"** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. அறம் 2. அன்பு 3. கொடை 4. அதர்மம்

(05) 'பொருளிலார்க்கு இன்பமில்லை துணையினை;' இங்கு **"இன்பம்"** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. ஆரவாரம் 2. துன்பம் 3. மகிழ்ச்சி 4. நிறைவு

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(06) அலுவலகள் நிகழ்த்துமிடம்
1. திணைக்களம் 2. நிதியம் 3. பணியகம் 4. திறைசேரி

(07) இயல், இசை, நாடகம் என்பவற்றில் சிறந்து விளங்கியவர் விபுலானந்தர். இங்கு இயல், இசை, நாடகம் மூன்றினதும் தொகைப் பெயர்.
1. முப்பொறி 2. முத்தமிழ் 3. முத்தொழில் 4. முப்பொருள்

(08) அறுபதாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
1. பொன்விழா 2. மணிவிழா 3. பவளவிழா 4. வெள்ளிவிழா

(09) தென்னையின் இளங்காய்
1. வடு 2. பிஞ்சு 3. குரும்பை 4. கச்சல்

(10) இப்படியிருக்கலாம் எனக்கொள்ளப்படுவதைக் குறிக்கும் சொல்
1. எடுகோள் 2. கருதுகோள் 3. பிரேரணை 4. கண்டனம்

(11) "இன்ரநெற்" என்பதற்குப் பொருத்தமான கலைச்சொல்
1. கணனி 2. வலைத்தளம் 3. இணையம் 4. ஊடகம்

(12) மிடி, நல்குரவு, வறுமை என்ற சொற்கள் குறிக்கும் பொருள்
1. பெருமை 2. குற்றம் 3. தரித்திரம் 4. செல்வம்

(13) இருதலைக் கொள்ளியெறும்பாக அவன் துன்பப்பட்டான். இங்கு 'இருதலைக்கொள்ளி' என்ற மரபுத் தொடரின் பொருள்,
1. இன்பமும், துன்பமும் 2. இருதலையையுடைய கொள்ளி
3. இருபக்கமும், துன்பம் 4. இன்பத்திலும் துன்பம்

(14) மாணவன் வகுப்பிலே இலைமறை காயாக இருந்தான். 'இலைமறை காய்' என்ற மரபுத் தொடரின் உட்பொருள்.
1. இலைக்குள் மறைந்த காய் 2. காயை மறைத்து வைத்தல்
3. வெளிப்படாது மறைத்திருத்தல் 4. இலையும் காயும் மறைந்திருத்தல்

(15) மலையும் மடுவும் என்ற இணைமொழியின் பொருள்
1. உயர்வு தாழ்வு 2. உயர்ந்த இடம்
3. மலைச்சிகரம் 4. தாழ்ந்த இடம்

(16) "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழியின் கருத்து
1. தொட்டிலிற் பழகியது சுடுகாட்டில் மாற்றமடையும்
2. சிறுவயதில் பழகுவதை எளிதில் மாற்ற முடியும்
3. சிறுவயதிலிருந்து பழகிய பழக்கம் இறப்பு வரை மாறாது
4. தொட்டிற் பழக்கம் சுடுகாட்டில் தெரியும்

(17) கிடைக்காத ஒன்றை நினைத்தல் என்பதைக் குறிக்கும் உவமைத் தொடர்
1. வலையிற் சிக்கிய மான் போல
2. விளக்கிலே மொய்த்த விட்டில் போல
3. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல
4. பழமரம் நாடிய பறவைபோல

(18) மங்கலமல்லாத சொல்லை மங்கலமாகச் சொல்வது
1. குழூஉக்குறி 2. இடக்கரடக்கல்
3. தகுதி வழக்கு 4. மங்கல வழக்கு

(19) மம்பட்டியால தோட்டத்தைக் கொத்தினான். 'மம்பட்டி' என்பதன் திருத்தமான வடிவம்
1. மண்வட்டி 2. மண்வெட்டி 3. மண்பட்டி 4. மம்பெட்டி

(20) 'விண்ணும் மண்ணும்' என்பது
1. அடுக்குமொழி 2. உவமைத்தொடர்
3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

(21) "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. கடவுள் 2. அவர் 3. நம்பினோர் 4. கைவிடப்படார்

(22) அந்திப்பொழுதில் செய்தி வந்தது. "அந்தி" என்பது
1. இடப்பெயர் 2. குணப்பெயர் 3. தொழிற்பெயர் 4. காலப்பெயர்

(23) தன்மைப் பன்மையாக வரும் பெயர்,
1. நீங்கள் 2. நான் 3. நாங்கள் 4. அவர்கள்

(24) பின்வருவனவற்றில் விளித்தொடராக அமைவது
1. உண்ட சாத்தன் 2. சாலச்சிறந்தது
3. மாணவர்களே! படியுங்கள் 4. மெல்லப் பாடினாள்

(25) ஆகா! இயற்கையில் இத்தனை அழகுகள் உண்டா? இதில் வந்துள்ள '!' என்ற குறி
1. தொடரிசைக்குறி 2. உறுப்பிசைக்குறி
3. வினாக்குறி 4. மெய்ப்பாட்டுக்குறி

(26) 'தேன்மொழி வந்தாள்' தேன்மொழி என்பது
1. உவமைத்தொகை 2. உம்மைத்தொகை
3. அன்மொழித்தொகை 4. வினைத்தொகை

(27) 'விழித்தாமரை' என்பது
1. உருவக அணி 2. உவமையணி
3. தற்குறிப்பேற்ற அணி 4. உயர்வு நவிற்சி அணி

(28) நனி குளிரில் நடுங்கினான் என்பதில் வந்துள்ள உரிச்சொல்
1. குளிர் 2. நடுங்கினான் 3. நனி 4. அவன்

(29) மரத்தினது கிளையை வெட்டினான். இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள வேற்றுமை
1. 3ம் வேற்றுமை 2. 6ம் வேற்றுமை 3. 7ம் வேற்றுமை 4. 4ம் வேற்றுமை

(30) 'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்' இதில் வந்த உவமானம்
1. பவளம் 2. மேனி 3. போல 4. பவள மேனி

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

(31) புத்தகத்தில் உள்ள படங்கள் ஒவ்வொன்றும்
1. அழகானது 2. அழகானவை 3. அழகுள்ளவை 4. அழகுள்ளன

(32) அறிஞர்கள் கூட்டத்தில் கூறிய ஒவ்வொரு கருத்தும்,
1. பயனுடையதாக இருந்தது 2. பயனுடையனவாக இருந்தன
3. பயனுடையதாக இருந்தன 4. பயனுடையனவாக இருந்தது

(33) கம்பராமாயணத்திலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும்,
1. கவிநயம் மிக்கதாய் அமைந்துள்ளது
2. கவிநயம் மிக்கவையாய் அமைந்துள்ளன
3. கவிநயம் மிக்கதாய் அமைந்துள்ளன
4. கவிநயம் மிக்கவையாய் அமைந்துள்ளது

**பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தினைத் தெரிவு செய்க**

(34) 1. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று நெஞ்சையள்ளும் சிளப்பதிகாரம்
2. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று நெஞ்சையல்லும் சிலப்பதிகாரம்
3. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்
4. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

(35) 1. பல்கலைக்கழக விரிவுரையாளர் சொற்பொளிவாற்றினார்
2. பல்கலைக்களக விரிவுரையாளர் சொற்பொலிவாற்றினார்
3. பல்கலைக்கழக விரிவுரையாளர் சொற்பொழிவாற்றினார்
4. பல்களைக்களக விரிவுரையாளர் சொற்பொளிவாற்றினார்

**பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்"

(36) வைகலும் என்பதன் பொருள்
1. இரவும் பகலும் 2. நாள்தோறும் 3. பகல் வேளை 4. இரவு நேரம்

(37) இங்கு கையாளப்பட்டுள்ள அணி
1. உவமை அணி 2. உருவக அணி
3. பின்வருநிலை அணி 4. உயர்வு நவிற்சி அணி

(38) 'வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்' என்பதன் பொருள்
1. நாள்தோறும் பொழுது கழியும் இயல்பை உணரமாட்டாதவர்கள்
2. நாள்தோறும் பொழுது கழிவதை விரும்புபவர்கள்
3. வைகல் வரக்கண்டு உணர்ந்தவர்கள்
4. நாள்தோறும் நாள்கழிதலை மறந்தவர்கள்

(39) இன்புறுவர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. இன்பமடைவர் 2. துன்புறுவர் 3. கோபமுறுவர் 4. மயக்கமடைவர்

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(40) (அ) அவர்கள் இரண்டு மூலப்பொருட்களைக் கலந்து கலவையைத் தூளாக அரைத்தார்கள்.
(ஆ) இவ்வாறு சீமெந்தைத் தயார் செய்தார்கள்.
(இ) அங்கே நவீன பெரிய இயந்திரங்களைக் கண்டோம்.
(ஈ) இந்தத் தூளை மிகவும் கூடிய வெப்பநிலையில் எரித்து குளிரச் செய்தார்கள்.
(உ) நானும் நண்பர்களும் சீமெந்துத் தொழிற்சாலைக்குப் போனோம்.

1. உ, அ, ஆ, ஈ, இ
2. அ, ஈ, உ, ஆ, இ
3. உ, இ, அ, ஈ, ஆ
4. உ, அ, இ, ஈ, ஆ

**நாளை தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி - I இற்கான விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**


க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

# மக்களை மயக்கும் மாந்திரீகம்

**மக்களை ஏமாற்ற மந்திரக்காரர்கள் கையாளும் செப்படுவித்தைகள் - பில்லி, சூனியம் என்ற பெயரில் நடக்கும் மோசடி ஆகியவற்றைத் தோலுரித்துக் காட்டும் சிறப்புப் பார்வை.**

பில்லி, சூனியம் போன்ற மூடப்பழக்க வழக்கங்களால் அப்பாவி மக்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள் என்பது மறக்க முடியாத உண்மை.

மாந்திரீகத்தை நம்பி வாழ்க்கையையே பறிகொடுத்தவர்களின் சோகக் கதைகள் அனேகம்.

மக்களை மயக்கும் அளவுக்கு இந்த மாந்திரீகர்கள் செய்யும் செப்படு வித்தைகள் என்ன, இந்த மூடப் பழக்கங்கள் பற்றி ஆன்மீகவாதிகள் சொல்வன என்ன என்பது பற்றி ஆராய்வோம்.

குடும்பத்தில் சச்சரவு, வியாபாரத்தில் நட்டம், உறவினர்களிடையே மனஸ்தாபங்கள் இப்படிப்பட்ட பிரச்சினைகளை உடையவர்கள் தான் மாந்திரீகங்களால் வழிதவறிச் சென்று மாட்டிக் கொள்பவர்கள்.

அத்தகையவர்களிடம் சிக்கலைத் தீர்ப்பதற்காக ஆசைவார்த்தைகள் கூறுவதுடன், ஒரு சில மாற்றுச் சிகிச்சைகளையும், இந்த மாந்திரீகர்கள் செய்து காட்டும்போது மக்கள் மயங்கிப் போய் மாந்திரீகர்களை நம்பிக்கையுடன் அணுகுகிறார்கள்.

இத்தகைய மாந்திரீகர்களை நம்பி ஏமாந்த குடும்பப் பெண் ஒருவர் இப்படிக் கூறுகிறார்.

என்து கணவருக்கு திடீரென பிரஸர்லோ ஆகிவிட்டது. அப்போது பக்கத்தில் இருந்தவர்கள் சிலர் இதற்கு பில்லி, ஏவல் போன்றன காரணமாக இருக்கும். இவரைப் போய்ப் பார்க்கலாம் என்று சொல்லிக் கூட்டிப் போனார்கள்.

அப்படிப்போனவுடனே உங்கள் வீட்டில் செய்வினை இருக்கிறது. இந்த மாதிரிப் பூஜை போட்டு இவ்வளவு நாட்கள் சாந்தி செய்தால் அவருக்குச் சுகமாகும் என்று சொல்லி, நாங்கள் வந்து பூஜை போட்டு கொடுக்கிறோம் என்று எங்கள் வீட்டுக்கு வந்து பெரும் தொகை செலவில் பூஜை புனஸ்காரம் என்று என்னென்னமோ செய்தார்கள்.

இப்படிச் செய்தும் அவருக்குக் குணமாகவில்லை. இது மாந்திரீகத்தை நம்பி ஏமாந்த ஒரு அப்பாவிப் பெண்ணின் கதை.

இதைப் பற்றி மதுரைச் சித்தர் என்ற ஆன்மீகத் தலைவர் கூறுகையில், செய்வினை என்று சொல்லி வீட்டின் மூலைக்கு மூலை குழிவெட்டுவார்கள். அதற்குள் கைவிட்டால் தலைமுடி வரும், துணிவரும், தகடுவரும் வேறு ஏதேதோ பொருட்கள் எல்லாம் வரும்.

இது எப்படியென்றால் இந்த மந்திரவாதிகள் கைக்குள்ளே இந்தப் பொருட்களையெல்லாம் வைத்திருந்து குழிக்குள் போட்டுவிட்டு எடுத்துக் காட்டுவார்கள். ரெம்பக் கஷ்டப்பட்டு எடுப்பது போலக் காட்டுவார்கள். இதைப் பார்க்கிற சனங்கள் மந்திரவாதி மந்திரத்தால் தான் இவற்றையெல்லாம் எடுக்கிறார்கள் என்று நம்பிவிடுவார்கள்.

குழிக்குள் இருந்து தகட்டை எடுத்துக் காட்டுவார்கள். இதோ பார்- இது ரெம்ப நாட்கள் பழைய தகடு. உங்களுக்கு கேடு செய்யத்தான் புதைத்திருக்கிறார்கள். இது காட்டேரி வேலை. இப்பொழுது நான் எனது மந்திரசக்தியால் இது இருந்த இடத்தைக் கண்டு பிடித்து எடுத்துவிட்டேன். இனி உங்களது தோஷங்கள், கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று சொல்வதையெல்லாம் நம்பும் மூடநம்பிக்கை யுள்ள சனக்கூட்டம் இருக்கும் வரை மந்திரவாதிகளின் ஏமாற்று வேலைகளும் இருக்கத்தான் செய்யும் என்றார் அவர்.

அதேசமயம் மக்களிடம் இந்த மந்திரக்காரர்கள் செய்து காட்டும் செப்படு வித்தைகளில் மந்திரமோ, மாயமோ ஏதும் இல்லை என்கின்றனர் விபரம் அறிந்தவர்கள்.

மாறாக வெறும் தந்திரங்களும், கண்கட்டு வித்தைகளுமே மந்திரவாதிகளின் மோசடிச் செயல்களுக்குப் பின்னால் ஒழிந்திருப்பதாக கூறுகின்றனர் இவர்கள்.

பில்லி, சூனியம், ஏவல், வைப்பு இவையெல்லாம் செப்படுவித்தைகள். இந்தச் செப்படுவித்தை சாதாரணமாக தெரு ஓரங்களிலே கூத்தாடிகள் செய்து காட்டும் வித்தை. இதனைத் தனி மனிதன் பண்ணுகிறான். இது மன்னிக்க முடியாத சட்டப்படியான குற்றம் இது என்றார் பேராசிரியர் ஒருவர்.

கிராமப்புறங்களில் இருக்கிற சில படிப்பறிவில்லாத மக்களையும், சில படித்த முட்டாள்களையும், பணக்கார முட்டாள்களையும் பேராசை உள்ளவர்களையும் பில்லி சூனியம் பெயரைச் சொல்லி ஏமாற்றி விடுகிறார்கள்.

பலதரப்பட்டவர்களுடனும் கூடிப் பழகி, நல்ல புத்தகங்களைப் படித்து, பல நாடுகளுக்குச் சென்று, மக்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டவர்கள் இதனால் ஏமாற்ற முடியாது என்கிறார் ஆன்மீகச் சொற்பொழிவாளர் சுகிசிவம்.

விஞ்ஞான ரீதியாக மாந்திரீக விஷயங்களை மறுப்பது ஒருபுறம் இருக்கட்டும். இன்னொரு பக்கம் தெய்வ நம்பிக்கையுடைய ஆன்மீகவாதிகளும் கூட, பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்றை அப்பட்டமான பொய் என்று கூறுகின்றனர்.

குட்டிச் சாத்தான் பூஜை செய்யும் மாந்திரீகர்கள் தாம் உண்மையாகவே நாஸ்தீகர்கள்.

கடவுள் ஒன்று, சொர்க்கம் ஒன்று, நரகம் ஒன்று. இந்த நரகம் சொர்க்கம் என்பதை வைத்துக் கொண்டு கடவுள் பேரை வைத்து எல்லாக் கற்பனைகளையும் உருவாக்கினார்கள். இப்படியெல்லாம் செய்யாவிட்டால் கடவுள் கோபப்பட்டுத் தண்டிப்பார் என்ற கதைகளையும் பரப்பினார்கள்.

உண்மையான இறை நம்பிக்கையுடைய ஒருவர் இதுபோன்ற வழிமுறைகளைப் பின்பற்றமாட்டார். கடவுள் பெரியவர், அவரை நாம் வழிபடுகிறோம் என்று நம்புபவர்கள் இந்த மாதிரியான விஷயங்களை நம்பமாட்டார்கள்.

மொத்தத்தில் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மந்திரவாதிகளை நாடுவதால் அவர்கள் துன்பங்கள் தீராது. பிரச்சினைகளும், பாதிப்புக்களும் மேலும் மேலும் அதிகமாகும்.

கண்டகண்ட பூசைகளைச் செய்து பணத்தை வீணாக்கக் கூடாது.

குடும்பத்தில் பிரச்சினையென்றால் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். வியாபாரத்தில் நஷ்டமென்றால் கடினமாக உழைக்கல்ாம். நோய்நொடி என்றால் நல்ல மருத்துவர்களை நாடலாம் என்ற மனத் தெளிவு மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்கின்றார்கள் சமூக ஆய்வாளர்கள்.

மூட நம்பிக்கை, பொறாமை, கோபம் போன்ற குணங்களைக் கைவிட்டு வாழ்க்கையில் முன்னேற்றத்தை மட்டுமே குறிவைத்து மக்களின் பயணம் அமையுமானால், மாந்திரீகர்களின் ஏமாற்று வித்தைகள் எதுவும் எடுபடாது என்பது சர்வ நிச்சயம்.

**-சிபி-**

## தமிழக அரசைக் கண்டித்து

## பா.ம.க. வின் மணியடிக்கும் போராட்டம்

(சென்னை)

தொழிற்கல்வி மாணவர் சேர்க்கை உட்பட பல விடயங்களில் தமிழக அரசு செயலற்றிருப்பதால் அதன் தூக்கத்தைக் கலைப்பதற்கு பா.ம.க.வினர் மணியடிக்கும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சென்னை வள்ளுவர் கோட்டம் எதிரே சென்ற செவ்வாய்க் கிழமை நடந்த இப்போராட்டத்துக்கு கட்சித் தலைவர் ஜி.கே. மணி தலைமை வகித்தார்.

தமிழக அரசின் கல்வித் துறை செயலற்றிருப்பதால் ஏராளமான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கையில் ஏராளமான குளறுபடிகளும், முறைகேடுகளும் நடந்ததையடுத்து மாணவர்கள் சி.பி.ஐ. விசாரணை கோரி வருகிறார்கள் என்றும் அப்போராட்டத்துக்குத் தலைமை வகித்த மணி பேசுகையில் குறிப்பிட்டார்.

மருத்துவ, பொறியியல் படிப்புக்கான நுழைவுத் தேர்வு முறையிலும் கவுன்சிலிங்கிலும் நடந்துள்ள வரலாறு காணாத குளறுபடிகளால் பெற்றோர்களும் மாணவர்களும் நிலை குலைந்துள்ளனர்.

தனியார் கல்லூரி நிர்வாகங்களே நுழைவுத் தேர்வு நடாத்திக் கொள்ளலாம் என்பது ஊழலுக்கு வழிவகுக்கும். வசதி படைத்த மாணவர்களுக்கே அங்கு இடம் கிடைக்கும்.

பிற மாநிலங்களில் கல்விக் கட்டணங்கள் குறைக்கப்படுகின்றன. தமிழகத்திலோ அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைத் தமிழக அரசு கண்டு கொள்ளாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறது. அதனைக் கண்டித்தே இந்த மணியடிக்கும் போராட்டத்தை நடத்துகின்றோம் என அவர் மேலும் கூறினார். (து)



## கலர் ரி.வி. ஊழல் வழக்கு

## வழக்கறிஞர்கள் மோதல்

(சென்னை)

கலர் ரீ.வி. ஊழல் வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. வழக்கறிஞர்களிடையே மோதல் ஏற்பட்டது.

1991 முதல் 1996 வரையான அ.தி.மு.க. ஆட்சியின் போது பஞ்சாயத்துக்களுக்கு கலர் ரி.வி. வாங்கப்பட்டதில் 10 கோடி ரூபாவுக்கு ஊழல் நடந்ததாக தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் முதலமைச்சர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா மற்றும் தினகரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

முன்னாள் தலைமைச் செயலர் ஹரிபாஸ்கர், முன்னாள் உள்துறை அமைச்சர் செல்வகணபதி, ஐ.ஏ.எஸ். அதிகாரி சத்தியமூர்த்தி உள்ளிட்ட 8 பேருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்து 8 பேரும் உயர் நீதிமன்றத்தில் அப்பீல் மனுத்தாக்கல் செய்தனர்.

ஜெயலலிதா விடுதலையை எதிர்த்து தி.மு.க. அரசு சார்பில் அப்போது அப்பீல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி ஏ.ஆர்.ராமலிங்கம் முன்னணியில் இவ்வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தபோது ஜெயலலிதா சார்பில் ஆஜரான அ.தி.மு.க. எம்.பி.யும் வழக்கறிஞருமான ஜோதி, தி.மு.க. சார்பில் ஆஜராகியிருக்கும் வழக்கறிஞர் விடுதலை இந்த வழக்குக்கு எந்த வகையிலும் தொடர்பு இல்லாதவர் என்றும் அவரைப் பேச அனுமதிக்கக் கூடாது என்றும் நீதிபதியிடம் கூறினார்.

இதனால் நீதிமன்றத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து தி.மு.க. சார்பு வழக்கறிஞர் எம்.பிரகாசம் ஏதோ கூற பரபரப்பான சூழ்நிலை அங்கு ஏற்ப்ட்டது.

இதையடுத்து விசாரணையை நீதிபதி வரும் 20ஆம் திகதி ஒத்திவைத்தார். (து)

## உயிருடன் புதைக்கப்பட்ட பச்சிளம் குழந்தை

(கூடலூர்)

பிறந்து சில மணி நேரமேயான பச்சிளம் குழந்தையொன்று உயிருடன் புதைக்கப்பட்ட சம்பவம் தமிழக - கர்நாடக எல்லைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது.

பிறந்து சிலமணி நேரமேயான இக்குழந்தை புற்கள் நிறைந்த மறைவிடத்தில் குழந்தையின் மீது புல்லைப் போட்டு மண்ணால் மூடப்பட்டுக் கிடந்தது.

புல் அறுக்கச் சென்ற குடியானவப் பெண்கள் அக்குழந்தையின் அழுகுரலைக் கேட்டு பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

பொலிஸ் உதவியுடன் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

குழந்தையின் உடலில் ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

குழந்தையின் பெற்றோர் யார்? இவ்விதம் குழந்தையைப் புதைக்கக் காரணம் என்ன என்பன குறித்து பொலிஸ் விசாரணை நடத்தி வருகிறது. (து)

**இந்தியச் செய்திகள்**

# இந்தியாவைப் பழிவாங்கும் எண்ணம் பாகிஸ்தானுக்கு ஒருபோதும் இல்லை

## கப்டன் இன்சமாம் உல்ஹக் பேட்டி

பாகிஸ்தானில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் தோல்வி அடைந்தற்காக ஆசியக் கோப்பையில் இந்தியாவை பழிவாங்கும் எண்ணமில்லை என்று அந் நாட்டு கப்டன் இன்சமாம் உல் ஹக் கூறியுள்ளார்.

பழிவாங்குதல் எனும் வார்த்தையை நாங்கள் பயன்படுத்துவதில்லை. இங்கு சிறப்பாக ஆடவே வந்திருக்கிறோம். சிறப்பாக ஆடி வெற்றி பெறுவோம். எனினும் கடுமையான போட்டிக்குத் தயாராக இந்தியா இருக்க வேண்டும். என்று ஆசியக் கோப்பைப் போட்டியில் பங்கேற்பதற்காக கொழும்பு வந்து சேர்ந்துள்ள பாகிஸ்தான் அணிக் கப்டன் இன்சமாம் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கோப்பைப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வங்கதேசம், ஐக்கிய அரபு. எமிரேட், கொங்கொங் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. நாளை தொடங்கும் ஆட்டம் எதிர்வரும் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை அனைவரையும் கவரும் வீரராக சோயிப் அக்தர் விளங்குகிறா கடந்த 5ஆம் திகதி முகாமில் இணைந்துகொண்ட அக்தர் நிருபர்களிடம் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. இதற்கு அணிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடே காரணம்.

கப்டனைத் தவிர பிற வீரர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறோம். வேறு எதிலும் அல்ல என்று தெரிவித்துள்ளார் அணி மேலாளர் ரஷீத்.

எதிர்வரும் சனிக்கிழமை தங்களது முதலாவது ஆட்டத்தில் வங்க தேசத்தை எதிர்கொள்கிறது பாகிஸ் தான். (உ)

# பாகிஸ்தான் பயிற்சியாளர் பௌலர்களுக்குத் தடை.

ஒருநாள் போட்டிகளில் நீண்ட நேரம் ஓடிவந்து பௌலிங் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அந்த அணியின் பயிற்சியாளர் பாப் ஊல்மர் தடை விதித்துள்ளார்.

எதிர்வரும் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சோயப் ஆக்ரோஷமான ஓட்டத்தை ரசிகர்கள் பார்க்க் முடியாது. ஏனெனில், ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் நீண்டதூரம் ஓடிவந்து பௌலிங் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்று பயிற்சியாளர் ஊல்மர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விஷயத்தில் சோயப் அக்தர் சிறப்பாகச் செயல்பட்டதாகவும், ஆசிய கோப்பையில் பந்துவீச அவர் ஓடிவரும் தூரம் குறைவாக இருக்கும் என்று 'தி நியூஸ்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

# நூறு மீற்றர் ஓட்டத்தில் கோட்டை விட்டார் மான்ட்கோமரி

உலகின் அதிவேக வீரர் என்ற பெருமையை பெற்ற டிம்மான்ட் கோமரி 100மீற்றர் ஓட்டத்தில் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறத்தவறினார்.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்கத் தடகள வீரர்களைத் தேர்வு செய்யும் தகுதிச் சுற்றுப்போட்டிகள் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டியில் ஆடவர் 100மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை மான்ட்கோமரி இழந்துள்ளார்.

மான்ட்கோமரியின் பெண் தோழியான மரியான் ஜோன்சும் கடந்த திங்களன்று நடைபெற்ற மகளிர் தகுதிச் சுற்றுப் போட்டியில் 100மீற்றர் ஓட்டத்தில் இறுதிப் பேட்டிக்கு தகுதி பெறத்தவறியது குறிப்பிடத்தக்கது.

ஊக்கமருந்து உபயோகித்ததாக மான்கோமரி மீது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அமெரிக்க அணியில் இருந்து தூக்கி எறியப்படும் வாய்ப்பு மான்ட்கோமரிக்கு இருந்தது. இந்த நிலையில் இருந்து தற்போது மான்கோமரி தப்பிவிட்டார்.

அமெரிக்க தகுதிச் சுற்று தடகளப் போட்டியில் ஆடவர் 100மீற்றர் ஓட்டத்தில் - மான்ட்கோமரி 7-வதாக வந்தார். இந்தப் போட்டியில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான மாரிஷ் கிரீன் 9.91விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்து முதலாவதாக வந்தார். ஜஸ்டின் காட்லின் 9.92 விநாடிகளில் ஓடி 2-வதாகவும், ஹான் கிராபோர்டு 9.93விநாடிகளில் ஓடி 3-வதாகவும் வந்தனர். மான்ட்கோமரி 10.13விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார்.

உலக சாதனையாளரான மான்ட்கோமரி போதை மருந்து பயன் படுத்தியதாக அமெரிக்க போதை மருந்து தடுப்புக்குழு குற்றம்சாட்டியுள்ளது.(உ)



அமெரிக்க உதைபந்தாட்டாப் போட்டியில் கொலம்பிய வீரர் எல்கின் முரில்லோ ஜோர்ஜி சோந்ரோ, ஜெபர்ஸன் பார் ஆகியோரிடம் சிக்கிய பந்தை பறித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடுவதைப்படத்தில் காணலாம்.

# தப்பிப்பிழைத்தார் ஆடம்ஸ்

திரிபோலியில் நடைபெற்று வரும் உலக செஸ் சம்பியன்ட்ப்ப் போட்டியின் ஆறாவது சுற்றில் இங்கிலாந்தின் ஆடம்ஸ்-உஸ்பெகிஸ்தானின் ரஸ்தம் இடையேயான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த ஆட்டம் மிகவும் பரபரப்பாக அமைந்திருந்தது. தோல்வியிலிருந்து தப்பிப்பிழைத்த ஆடம்ஸ் ஒருவாறாக சமநிலை கண்டார். இதன் மூலம் இருவரும் 3-3என்ற புள்ளி கணக்கில் உள்ளனர். இந்தத் தொடரின் விநோத அம்சமாக வெள்ளைநிற காய்களை வைத்து விளையாடுபவருக்கு வெற்றிகிடைத்து வருகிறது.

இதைத் தொடர்ந்து குறுகிய நேரம் மட்டுமே நடத்தப்படும் ஆட்டங்களை ஆடவுள்ளனர். இதில் வெற்றிபெறுபவருக்குப் பட்டம் கிடைக்கும். (உ)



கலிபோர்னியா லோங் பீச்சில் நடைபெற்ற அமெரிக்க பெண்களுக்கான 200 மீற்றர் தூர பின்புறமாக நீந்திச்செல்லும் போட்டியில் முன்னணியில் நீந்திச்செல்லும் ஹால்லி மெந்கிரகர்.

# தோல்வியைக் கண்டு சோராத வீரன் கப்டன் பிறையன்லாரா

முத்தரப்பு தொடர் இறுதிப் போட்டியில் அடைந்த தோல்வியானது. இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவிருக்கும் டெஸ்ட் தொடரில் மேற்கிந்திய தீவுகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்று கப்டன் பிரையன்லாரா தெரிவித்துள்ளார்

இங்கிலாந்தில் சமீபத்தில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் 107ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவு தோற்றது.

இந்த நிலையில் இங்கிலாந்து மேற்கிந்திய தீவுகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் இம்மாதக் கடைசியில் தொடங்குகின்றது. இவ்வருடத் தொடக்கத்தில் இங்கிலாந்து அணி மேற்கிந்திய தீவுகள் சென்றிருந்த போது 3-0என்ற நிலையில் இங்கிலாந்து வென்றது. இதற்கு பழிவாங்கும் விதமாக எதிர்வரும் தொடரை வெல்லும் முனைப்பில் மேற்கிந்திய தீவுகள் உள்ளது.

இந்நிலையில் முத்தரப்பு தொடர் இறுதிப்போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி தோற்றுள்ளது. இந்தத் தோல்விக்கும் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இந்தத் தோல்வியானது டெஸ்ட் தொடரில் எந்த விதத்திலும் பாதிக்காது என்றும் பிறையன் லாரா தெரிவித்துள்ளார்.

(உ)

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST
ஒலிம்பிக்கிற்கு இன்னும் 36 தினங்கள்

# விளையாட்டுச் செய்திகள்

# ஆசியக் கோப்பைத் தொடர் நமக்கே

## இந்திய துணைக் கப்டன் நம்பிக்கை

ஆசியக் கோப்பைத் தொடரில் இந்திய அணியின் வெற்றிக்கு



இலங்கையில் நிலவும் சீதோஷண நிலையும் அணியின் திட்டமிடுதலும் பெரிதும் உதவும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். துணைக் கப்டன் ராகுல் ட்ராவிட்.

ஆசியக் கோப்பைக் கிரிக்கெற் போட்டி நாளை இலங்கையில் தொடங்குகிறது. சௌரவ் கங்குலி தலைமையிலான இந்திய கிரிக்கெற் அணி இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளது.

இலங்கை புறப்படும் முன் மீனம்பாக்கம் விமான நிலையம் அருகில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் இந்திய கிரிக்கெற் அணியின் துணைக் கப்டன் ராகுல் ட்ராவிட் மற்றும் பயிற்சியாளர் ஜான் ரைட் ஆகியோர் நிருபர்களைச் சந்தித்தனர்.

அப்போது துணைக்கப்டன் ராகுல் ட்ராவிட் கூறியதாவது,

இந்திய அணியில் இருந்து காயம் காரணமாக வெளியில் இருந்த பந்து வீச்சாளர்கள் அனைவரும் இப்போது நலமடைந்து மீண்டும் அணியில் சேர்ந்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. இதனால் அணியின் பலம் அதிகரிக்கும். மற்ற வீரர்களும் முழு உடல் தகுதியுடன் உள்ளனர். அதுவும் மகிழ்ச்சியான விஷயம். இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி நாங்கள் முழுத் திறனுடன் ஆசியக் கோப்பைக்கான போட்டிகளில் விளையாடுவோம்.

ஆனால் போட்டிகளின் முடிவுகள் என்பது இலங்கையில் நிலவும் சீதோஷண நிலை மற்றும் அணியின் திட்டமிடுதல் ஆகியவற்றைப் பொறுத்தே அமையும். இவைதான் வெற்றியை நிர்ணயிக்கக் கூடிய அம்சங்களாக இருக்கும். இந்திய கிரிக்கெற் அணியைப் பொறுத்தவரையில் நடக்க உள்ள ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் விளையாடுகிறது. அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்பது தான் எங்கள் குறிக்கோள்.

5 நாள் டெஸ்ட் போட்டிகள் என்பது வேறு ஒருநாள் போட்டிகள் என்பது ஒருங்கிணைந்த ஆட்டத்தின் மூலம் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் கொண்டது.

ஜெப்ரி பாய்காட், கபில்தேவ் போன்ற முன்னணி வீரர்கள் இந்திய கிரிக்கெற் அணியின் வீரர்களுக்கு ஆலோசனைகூறி வருகின்றனர். இவர்கள் நேருக்கு நேர் தரும் ஆலோசனைகள் பயனுள்ளவை. இப்போட்டியில் சேவாக் இரட்டைச்சதம் அடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அது அவரின் விருப்பம். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள் என்றார்.

(உ)

# இடைக்கால நிர்வாகசபை ஊடாக ஈழத்தைப் பெறுவதே புலிகளின் இலக்கு

## ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை ஊடாக ஈழத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளிலேயே விடுதலைப்புலிகள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் இவ்வாறு கூறியுள்ளார்.

கொழும்பின் பல பாகங்களிலும் ஏனைய இடங்கள் சிலவற்றிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் சமாதான முன்னெடுப்புக்களை ஆட்சேபித்தும் மக்கள் விடுத்லை முன்னணியால் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இது விடயம்குறித்து நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தக்கூடியதான நடவடிக்கைகளுக்கு மக்கள் விடுதலை முன்னணி பெரும் ஆதரவை வழங்கும். இதில் எவ்வித ஐயமில்லை.

நாங்கள் சமாதானத்தின் விரோதிகளல்ல. தற்போது பரவலாக வெளியிடப்பட்டுள்ள சுவரொட்டிகளை ஆழமாகக் கூர்ந்து கவனித்தால் உண்மைநிலை புரியும். சமாதான நடவடிக்கைகளுக்கு நாம் ஒரு போதும் எதிரானவர்களல்ல. அண்மைக்காலமாக விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகளையே நாட்டு மக்களுக்கு இவற்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளோம்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையானது, நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச்செல்லும் வகையிலேயே காணப்படுகிறது. நாட்டின் இறைமைக்குக் குந்தகமாகவுள்ள இவ் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை, தமிழீழத்திற்கே வழிசமைக்குமென அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா உட்பட ஏனைய பலதரப்பினராலும் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபின் யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படுமானால், நாட்டில் ஒரு யுத்தமல்ல பல யுத்தங்கள் வெடிக்கும் பாரிய அபாயமுண்டு.

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் சம அந்தஸ்தும் உரிமையும் எல்லாத் துறைகளிலும் வழங்கப்படவேண்டும். இவ்வாறானதொரு தீர்வுத்திட்டத்தையே நாங்கள் முன்வைக்கிறோம். அதை முழுமையாக வரவேற்கிறோம். சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைப் போன்று நாட்டில் அனைத்தையும் அனுபவிப்பதற்குத் தமிழர்களுக்கும் நூறு சதவீதம் உரிமையுண்டு.

அவ்வாறான உரிமைகளைச் சுதந்திரமாக நிலையாகப் பெற்றுக்கொள்வதற்காகத் தமிழர்களை உரித்துடையவர்களாக ஆக்க வேண்டும். இந்நிலைமையைத் தோற்றுவிக்காது ஒரு சில பிரதேசங்களுக்கு மாத்திரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை பாகுபடுத்தும் போது ஜனநாயக ரீதியிலான பல பிரச்சினைகள் உருவாகும். இது தவிர்க்கப்படவேண்டும். நாட்டில் அனைத்து இன மக்களும் சரிசமமான உரிமையுடன் வாழ்வதற்கேற்ற நிலைமை விரைவில் உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(உ-18,62)

## லயன்நிர்வாகிகள் பதவியேற்பு

வடமராட்சி லயன்ஸ் கழக புதிய தலைவராக லயன் எம்.தர்மலிங்கமும் (இணைப்பாறிய சமூக சேவை உத்தியோகத்தர்) செயலாளராக லயன் வீஎஸ்சிவநாதனும், (இலங்கை வங்கி முகாமையாளர், பொருளாளராக லயன் கே.தங்கராஜாவும் (பருத்தித்துறை பிரபல வர்த்தகர்) பதவியேற்றுள்ளனர்.

இப்பதவியேற்பு வைபவம் புலோலி மேற்கு சதாவதானி கதிரேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் லயன் எஸ்கதிரமலை தலைமையில் நடைபெற்றது.

லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர். எஸ்.எஸ். அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

306 பி மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.லலித் பெர்ணாண்டோ வலயத் தலைவர் லயன் எஸ்.விக்டர் ஸ்ரீபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.


லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் ரீ.சற்குணராஜா, மாவட்ட இணைப்பாளர் லயன்ஸ் கே.தணிகாசலம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு பருத்தித்துறையில் தஞ்சமடைந்து முகாம்களில் வாழ்ந்துவரும் 20குடும்பங்களுக்கு சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைப்பொருட்களும் வழங்கப்பட்டன.(உ-52)

# ஜனாதிபதி சந்திரிகா கவலை ஐக்கிய தேசியக்கட்சி ஆச்சரியம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிக



ளுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் முறையற்றதெனவும், சட்டவிரோதமானதெனவும் அன்று தெரிவித்த இலங்கை ஜனாதிபதி, இன்று போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுகின்றமை தொடர்பாக கவலை வெளியிட்டு வருகின்றமை ஆச்சரியத்தைத் தருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் முறையற்றதெனவும், இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தெரிவித்தே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

தற்போது மட்டக்களப்பில் இடம்பெறும் சம்பவங்கள், கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பு சம்பவங்கள் என்பன, விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதிக்குமோ எனத் தாம் கவலைப்படுவதாக ஜனாதிபதி அறிக்கை வெளியிட்டுவருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர்,

இக்கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் சுதந்திரக் கட்சியினர், அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக ஆலோசித்து வருவதாகத் தெரிவித்த போதிலும், அரசாங்கத்தின் தோழமைக் கட்சியான ஜே.வி.பி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராகவும், அவர்களின் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராகவும் கொழும்பில் சுவரொட்டிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(உ-121)

## பெண் தற்கொலையாளி குண்டைப் பொருத்தியிருந்த இடம்குறித்து புதிய ஊகம்

கொழும்பில் கொள்ளுப்பிட்டியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட பெண், வழமையான இடுப்பில் கட்டியிருக்கும் தற்கொலைக் குண்டுக்குப் பதிலாக, தனது மார்புக் கச்சையில் தற்கொலைக் குண்டைப் பொருத்தியிருந்தார் என்று கொழும்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பாலித சிறீவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவரது மகனின் வீட்டில் பணிப் பெண்ணாகப் பணியாற்றியதாக புலனாய்வுத் துறையை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது.

தற்கொலைக் குண்டுதாரியை இந்த அமைச்சரின் மகனுக்கு பணிப் பெண்ணாக அறிமுகப்படுத்திய பெண் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந் நிலையில், இந்தப் பெண்ணின் இடுப்பை முதலில் பரிசோதித்த போது, தற்கொலைக் குண்டைக் கட்டியிருப்பதற்கான எந்த அடையாளமும் இடுப்பில் இருக்கவில்லை என்றும், அதனால், மார்புக் கச்சையுடன் இணைத்த தற்கொலைக் குண்டை இப்பெண் அணிந்திருந்திருக்கிறார் என்றும் அப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலை நடைபெற்ற இடத்தையும், தற்கொலைக் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட பெண்ணின் உடலையும் பரிசோதிக்கும் குண்டுப் பரிசோதனை நிபுணர்களின் அறிக்கை இன்னும் வெளிவராத நிலையில், பொலிஸாரின் இத்தகைய ஊகங்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கைது செய்யும் தமிழ்ப் பெண்களின் நிலையை சங்கடத்திற்குள்ளாக்கும் என்று பெண்கள் பாதுகாப்பு நிறுவனமொன்று கவலை தெரிவித்துள்ளது.

(உ)

## பிரபா பற்றிய நூலின் முதற் பிரதி பிரதமரிடம்

ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட **Inside an elusive mind of Prabakaran** எனப்படும் தமிழீழ தேசியத் தலைவரைப் பற்றிய நூலின் முதற்பிரதி இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய செய்திச் சேவையின் செய்தி ஆசிரியரான எம்.ஆர்.நாராயணசுவாமியினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல், விஜித யாப்பா எனப்படும் இலங்கையின் பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனத்தினால் மொழி பெயர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் வெளியீட்டாளர் விஜித யாப்பா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்த போதே இந்நூலின் முதற்பிரதியை அவருக்கு வழங்கியுள்ளார்.

கொழும்பில் கடந்த வருடம் நடைபெற்ற புத்தக விற்பனைக் கண்காட்சி ஒன்றில் இந்நூலின் ஆங்கில மூலப் பிரதிகள் முதல் இரு நாட்களில் மட்டும் சுமார் ஆயிரம் பிரதிகள் விற்பனையாகியிருந்தன.

இந்நூலின் ஆசிரியரான எம்.ஆர்.நாராயணசுவாமி **Tigers of srilanka** என்ற நூலினையும் ஏற்கனவே வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-121)

## ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு மூன்று நாள் விஜயம்

ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஜொசிக்கா வின்சர் இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர், 19 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது, அவர் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஸ, வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.(உ-121)

## ஆயுத ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடும்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடாந்தக் கூட்டத் தொடரின் போது, அணுவாயுதங்கள் தவிர்ந்த ஆயுதங்கள் தொடர்பான ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுடன், இதற்கான ஆலோசனைகளை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வழங்கியிருப்பதாகவும், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம், நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்தல், நிலக்கண்ணி வெடிகளை வெடித்தல், தீப்பற்றும் ஆயுதங்கள், கதிரியக்க ஆயுதங்கள் போன்ற ஆயுதங்கள் தொடர்பான சர்வதேச கொள்கைகளுடன் இலங்கையும் ஒன்றிணைந்து செயற்பட முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தற்கொலைக் குண்டுகள் தொடர்பான சட்டமாகிய ஒற்றாவா சட்டத்தின் கீழ் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் இலங் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-121)

## ஆட்களில்லா வீட்டில் பூட்டில்லாச் சைக்கிள்

(பருத்தித்துறை)

புலோலியில் ஆட்கள் குடியிருக்காத வீடொன்றுக்குள் அநாதரவாகநின்ற புதிய சைக்கிள் ஒன்று புலோலி விழிப்புக்குழுவினால் மீட்கப்பட்டுள்ளது.

புலோலி கிழக்கு நறுவிலி வீதியிலுள்ள ஆட்கள் குடியிருக்காத வீடிற்குள்ளேயே இப்புதிக சைக்கிள் பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

பாடசாலை ஆசிரியையொருவர் கொடுத்த தகவலையடுத்து அங்கு சென்ற விழிப்புக்குழுவினர் சைக்கிளை மீட்டுப் பருத்தித்துறைப் பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.(உ-52)

## வீதிகள் சேதமாவதைத் தடுக்க பாரவூர்திகளுக்கு புதிய நடைமுறை

(கொழும்பு)

சாதாரண வீதிகளில் போக்குவரத்து செய்வதற்காக வாகனங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்திற்கான அதிகூடிய பாரமான 30மெற்றிக்தொன்னை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான ஆலோசனை ஒன்றை போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.எஸ்.ஜெயவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி 30 மெற்றிக்தொன்னுக்கும் மேற்பட்ட பாரங்கொண்ட வாகனங்கள் வீதியில் போக்குவரத்து செய்யும் போது அவற்றுக்கு விசேட அனுமதிப் பத்திரம் பெறப்படவேண்டும்.

இதேவேளை, சாதாரண பாதையில் பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த பார எல்லை 30மெற்றிக் தொன்னில் இருந்து 60மெற்றிக் தொன்னாக கடந்த ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இதனால் வீதிகளும், குளக்கட்டுகளும், பாலங்களும் துரிதமாக சேதமடைந்ததாகவும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(உ-61,10)

# கல்வியும் பிள்ளைகளின் வளர்ச்சியும்

நாம் உலகில் எல்லாவற்றையும் மக்களுக்கு கற்பிக்கின்றோம்-ஆனால் மிகவும் முக்கியமானதை கற்பிப்பதில்லை-அது தான் 'வாழ்வு' இதைப்பற்றி ஒருவரும் கற்பிப்பதில்லை. ஒவ்வொருவரும் அதைப்பற்றி அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். நாம் மனிதராக இருக்க வேண்டும் என்பதை ஒருவரும் கற்பிப்பதில்லை-நாம் மனிதராக இருப்பதின் அர்த்தம்,மனிதனின் மாண்பு பற்றி எவரும் சொல்லித் தருவதில்லை. இவைகள் பற்றி இயல்பாகவே மனிதர் அறிந்திருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'எமது கல்வியில் வாசிக்க, எழுத,கணக்குபார்க்க, உச்சரிக்க, எழுத்துக்கூட்டுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது. அதையும் மாணவர்கள் மிகவும் நன்றாகச் செய்கின்றனர்.ஆனால் எமதுகல்வி மனிதத்தை உருவாக்குவதில் மிகுந்த தோல்வியைக் கண்டுள்ளது' என்றுலெயோனாட் சில்பெர்மான் கூறுகின்றார். இதில் உண்மை இருக்கின்றது.

## கல்விப் பணி புரிவோரின் பங்கு

எங்கே தவறு இருக்கின்றது? பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும், கல்விப் பணியில் ஈடுபடுவர்கள் நல்லவர்களாக, உணர்வுள்ளவர்களாக ,தனித்துவமுடையவர்களாக ,நல்ல ஆளுமை படைத்த திறமையுடையவர்களாக இருக்கவேண்டும். இப் படிப்பட்டவர்கள் தங்களையே கொடுத்துப் பகிரக்கூடியவர்களாக இருப்பர்.

சிந்தித்துப்பாருங்கள் ஒருவருக்கு ஞானம் இல்லை என்றால் அவர் அறிவின்மையைதான் கொடுப்பார்.ஒருவரிடம் மகிழ்ச்சியில்லை என்றால் அவரால் மனமுடைந்த நம்பிக்கையைத்தான் கொடுக்க முடியும் ஒருவரிடம் சுதந்திரமில்லை என்றால் அவர் மற்றவர்களைக் கூண்டிலேதான் அடைப்பார். நாம் வைத்திருப்பவைகளைத்தான் எம்மால் கொடுக்கவோ,பகிரவோ முடியும். நாம் வைத்திருப் பவைகள் இதனால் தான் அர்த்தம் பெறும்.உருவாக்கம் கொடுக்கின்றவர்கள் நல்ல பண்புகளை, மனிதத்தைகொண்டிருந்தால் தான் அவர்கள் மாணவர்களுக்கு வழங்க முடியும்.

எமது கல்வியில் இன்னுமொரு அம்சம் கவலையளிக்கின்றது, கற்பிப்பவர்கள்மாணவர்கள் எல்லோரும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, உதாரணமாக ஒரு ஆசிரியர் 'நாமின்று ஒருமரத்தை வரைவோம்' என்று கூறிக்கொண்டு ஒரு 'புல்லை' கரும்பலைகையில் வரைந்து 'இந்த மரத்தை நீங்களும் வரையுங்கள்' என்று கூறுகின்றார் என வைத்துக் கொள்வோம், மாணவர்கள் எல்லோரும் அதை வரைகின்றனர். ஆனால் ஒருமாணவனின் மனதில் பெரியதொரு குழப்பம்-கரும்பலகையில் இருப்பது மரமா? புல்லா? என்பது 'புல்' என்று கூறினால் புள்ளிகள் கிடைக்காது. இது 'மரம்' தான் என அவனும் வரைகின்றான். ஆகையால் கல்வி என் பது சில தரவுகளை மாணவர்களுக்குத் திணிப்பதல்ல மாறாக ஒருவருடைய தனித்துவத்தை அவர் கண்டுகொள்ள உதவ வேண்டும்.முதலில் கற்பிப்பவர்கள் இதைக் கண்டு, பின்பு பிள்ளைகளுக்கு அவர்களின் தணித்து வத்தைக்காண உதவ வேண்டும். 'EDUCATION' என்ற ஆங்கிலச் சொல் லத்தீன் மொழியில் 'EDUCARE' என்ற சொல்லிலிருந்துபெறப்பட்டது. இதன் அர்த்தம் என்னவென்றால் 'வழிகாட்டுதல்' என்பது பொருள். எனவே நாம்படிப்பிக்கின்றோம் என்பது பொய். மாறாக நாம் வழிகாட்டுகின்றோம் என்பது தான் உண்மை-இந்த வழிகாட்டுதல் மூலமாக மாணவர்களின் தனித்துவங்களை அடையாளம் காணவும், அவர்களை பாராட்டி வளர்க்கவும் உதவ வேண்டும். இதனால் மாணவர்களின் மகிழ்ச்சியைக் கூட்டுகின்றோம், அவர்களது படைக்கும் ஆற்றலை வளர்க்கின்றோம்.

## இன்றைய கல்வி நிலை

ஆனால் இன்றைய நிலை மிகவும் வருந்தத் தக்கது. கல்விக் கூடங்களில் அன்பு வற்றிப்போய் மனிதம் தோற்றுப் போயும் உள்ளது. மாணவர்களின் தனித்துவங்களைப்பற்றி அக்கறை கொள்ளாது."நான் செய்வதுபோல நீயும் செய், நான் சொல்பவற்றை நீ கிளிப்பிள்ளையைப் போன்று சொல்' என்ற மனோபாவம் மாணவர்களின் ஆற்றலை அழிக்கின்றது.

முயல் ,புறா,மீன், அணில், வாத்து, சுண்டேலி என்பன ஒரு பல்கலைக்கழகம் அமைத்தன-அதில் நீச்சல், மரம் ஏறுதல், நிலத்தில் புற்றெடுத்தல் என்பன பாடங்கள் ஆயின-அவைகள் விட்டபிழை என்னவென்றால், எல்லாரும் எல்லாப் பாடமும் செய்யவேண்டும் என்பதே.எனவே முயல் பறக்கும் பாடம் எடுத்து பறக்க முயற்சி எடுத்தது.அதை மரத்தில் ஏற்றி வைத்

அருட்திரு எஸ்.ஜே.இராஜநாயகம்

துப் பற என்று எல்லாரும் கத்தினர்.முயல் பாய்ந்தது ஆனால் தொப்பென்று கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டது.

அது ஓட்டத்துக்கு 100புள்ளி எடுத் திருக்கும் ஆனால் ஓட்டத்திற்கு பூச்சியம் பெற்றது.பறப்பதற்கு முயற்சி எடுத்ததால் அதற்கு 20 புள்ளிகள் கொடுக்கப்பட்டது. அதைப்போல் புறா நிலத்தில் புற்றெடுக்க முயன்று தனது இறகுகளை உடைத்துக் கொண்டது. பறத்தலுக்கு 100 புள்ளி பெற வேண்டிய புறா பூச்சியமே பெற்றது. புற்றெடுக்கும் முயற்சிக்கு 20 புள்ளி பெற்றது. இது ஒரு உருவகக் கதையாக இருப்பினும் இன்று நடைமுறையில் கல்வி இந்த நிலையில்தான் உள்ளது. இது எல்லாருக்கும் பிழை என்று தெரியும். ஆனால் இதுபற்றி ஒரு வரும் ஒன்றும் செய்வார் இல்லை-மாணவர்களின் விரக்திக்கும் இது ஒருகாரணமாக அமைகின்றது-எமதுபடிப்பு முடிவில் நாம் சில வேளைகளில் புத்தக அறிவில் வளர்ந்தவர்களாக விரக்தியுள்ளவர்களாக, சுகவீனமுள்ளவர்களாக, கண் இருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக கல்விக் கூடங்களை விட்டு வெளிவருகின்றோம்.

## மாணவரின் தனித்தன்மை மழுங்கடிக்கப்படல்

இங்கு ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற மனப்பாங்கு மாணவர்களுடைய தனித்து வத்தை மழுங்கடிக்கின்றது. இவ்வுலகில் பிறக்கும் மனிதர்கள் அனைவரும் தனித்துவமுடையவர்கள். ஒவ்வொருவரும் தனக்கே உரிய பண்புகளும் ஆற்றல்களும் திறமைகளும் உடையவர்களாக இருக்கின்றனர் .ஒவ்வொருவரையும் தனக்கே உரிய ஆற்றல்களையும் திறமைகளையும்,பண்புகளையும் கண்டுபிடிக்க இனங்காணவைத்து அவர்களை தட்டிக்கொடுத்து வளர்க்க உதவ வேண்டும். இப்படிச்செய்யாதபோதும், ஒருவரின் வாழ்வின் வளர்ச்சி தடைப்படுகின்றது.காரல் றொஜர்ஸ் 'ஒவ்வொரு மனிதனும் முழுமைபெற விரும்புகின்றான்' என்றார். முழுமையை அடைய தடைகள் வருகின்ற போது ஒருவர் பலவாறான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார். வன்முறைகள்,பிறழ்வு நடத்தைகளும் இங்கு தூன்தோன்றுகின்றன.

இந்த உலகை நாம் ஒரு அழகான பூந்தோட்டமாகப் பார்க்க வேண்டும்.இந்த பூந்தோட்டத்தில் ஒரேஒரு வகை பூ/மலர் மட்டும் தான் இருப்பதென்றால் அது அழகாக இருக்காது. இந்தப் பூந்தோட்டத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஒருதனித்துவமான பூ/மலர்.இதையுணர்ந்து நாம் கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

இப்படியாக இந்த உலகில் வாழுகின்றவர்கள் ஒவ்வொருவரும் இவ்வுலகத்திற்கு தாம் வழங்க வேண்டியது என்ன என்பதை அறிந்து செயற்படும் போது இந்த உலகில் எல்லோரும் சமாதானமாக ,அமைதியாக, அன்பாக வாழும்நிலை ஏற்படும்.

நன்றி:-
கல்வியியலாளன்

## வெலிக்கடையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சத்தியலீலாவுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் அண்மையில் இளம் பெண் ஒருவர் குண்டைவெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தையடுத்து, அவருக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சத்தியலீலா என்ற பெண், வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனால் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடுமையான பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப் பட்டவருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன். சத்தியலீலா தொடர்ந்து சி.ஐ.டியினரால் விசாரணைக்கு உட்படத்தப்பட்டு வருவதுடன் ஏனைய பெண் கைதிகளிடமிருந்து இவர் தனிமைப்படுத் தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இப்பெண்ணை கண்காணிப்பதற்கென பெண்பொலிஸ் அதிகாரியொருவர் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி,இக்கைதியுடன் இதர சிறைக் கைதிகளோ பொலிஸ் அதிகாரிகளோ உரையாடக் கூடாது எனவும் சி.ஐ.டியினர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-10)

## விசாரணைகளைத் துரிதப்படுத்த சட்டமா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரச சட்டத்தரணிகளுக்கு சட்டமா அதிபர் கமல சபேசன் மீண்டும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளில் அநேகமானவை பூர்த்தி அடைந்திருப்பதாகவும் இன்னும் 25வழக்குகள் மாத்திரமே விசாரிக்கப்படவேண்டியிருப்பதாகவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

போதிய சாட்சியம் இல்லாத சந்தேக நபர்களிற்கு எதிரான குற்றப்பத்திகைகள் யாவும் வாபஸ் பெறப்பட்டதாகவும் இதனால் குறிப்பிட்ட சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்குதாம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

## 70 கோடி ரூபா செலவில் 10ஆயிரம் குளங்கள் 2007ற்குள் புனரமைப்பு

(கொழும்பு)

நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ விவசாய ,கால் நடை,காணி அமைச்சினால்,நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் 70கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் அனுராகுமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக இன்னும் 6 மாத காலத்துள் 664 குளங்களும் 336 அணைக் கட்டு களுமாக ஆயிரம் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

அதன் பின்னர் அடுத்த வருடம் 2ஆயிரம் குளங்களும் 2006ஆம் ஆண்டு 3ஆயிரம் குளங்களும் 2007ஆம் ஆண்டு 4ஆயிரம் குளங்களுமாக இப்புனரமைப்புத் திட்டம் பூர்த்தியாக்கப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான நிதியை அரசாங்கம் நீரப்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி நிதியம் என்பனஒதுக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## 100 பேரை ஏமாற்றிய கில்லாடிப் பெண்ணைத் தேடி பொலிஸார் வலை விரிப்பு

(கொழும்பு)

குவைத் வைத்தியசாலையொன்றில் 40ஆயிரம் ரூபா மாதாந்தச் சம்பளத்துடன் கூடய வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி 100 பேரை ஏமாற்றிய பெண் ஒருவரை கைது செய்யும் நடவடிக்கையில் தெசாவளைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கற்றகால என்ற பிரதேசத்தில் வசித்துவந்த இரண்டு குழந்தைகளின் தாயான இந்தப் பெண் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 50ஆயிரம் ரூபாவை முற்பணமாக வாங்கியுள்ளார்.

அதன் பின்னர் அவர் முன்னேஸ்வர ஆலயத்திற்குச் சென்று வெளி நாடு செல்பவர்களின் நன்மை கருதி அர்ச்சனை செய்து வரப் போவதாகக் கூறிவிட்டு தலைமறைவாகியதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறிள்ளனர். (உ-60,10)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில், நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு சி.கிருஷ்ணபிள்ளையின் அறிமுகவுரையும்,யாழ்.வட்டுக்கோட்டை கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேலின் பெரிய புராணம் பற்றிய தொடர் சொற் பொழிவும்இடம் பெறவுள்ளது. (உ-10)

## ஜனாதிபதியின் ஆலோசகராக அலவிமௌலானா

(கொழும்பு)

முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பினை ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யு. ஜே.எஸ்.கருணாரத்தின ஆளுநர் அலவி மௌலானவுக்கு அனுப்பியுள்ள கடித்தில் தெரிவித்துள்ளார். (உ-61,10)

## 3பாடசாலைகளுக்கு 30கணனிகள்

(பருத்தித்துறை)

கல்வித் திணைக்களத்தின் பொதுக் கல்வித் திட்டம் IIஇன் கீழ் வடமராட்சி வலயத்திலுள்ள 3பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்ப நிலையங்களுக்கு 30 கணனிகள் வழங்கப்படவுள்ளன.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற் றுக்கே இக்கணனிகள் கிடைக்கவிருக்கின்றன.

இக்கணனிகளுடன் 30 கணனி மேசைகள்,30கணனிக் கதிரைகள் உட்பட பல உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

## இரட்டைவரி ஒப்பந்தத்தில் கைச்சாத்து

(கொழும்பு)

இரட்டை வரி தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்காவும் இலங்கையும் கடந்த திங்களன்று கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை சார்பில், திறைசேரியின் செயலாளர் டாக்டர் பீ.பீ. ஜயசுந்தரவும்,அமெரிக்கா சார்பில் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டட்டும் இவ் உடன்படிக்கையில் ஒப்பமிட்டள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் வகையில் செய்து கொள்ளப்பட்ட இவ் உடன்படிக் கையின் பிரகாரம் இலங்கைக்குப் பெருமளவில் நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ-18)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்.)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லை நாவலர் மணி மண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அதிபர் அன்னை தாஸன் ஆனந்தராசா "திருவருள் பெற'என்ற விடயத்தில் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (உ-19)

## விண்ணப்பம் கோரல்

அஞ்சல் மற்றும் உப-அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதிலாட்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரால் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அந்தந்தப் பட்ட பிரதேச தபாலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் பார்வையிடலாம் எனவும் இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி எனவும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (உ-18)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு - குறள்

வலம்புரி

## சோமவன்ஸ கர்ச்சிக்கும் இனவாதத் தீ

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். இவ்வாறு தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ கூறியதில் இருந்து இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு இடம் இல்லை என்பதே அவரின் மறைமுகமான கருத்தாகும்.

அதாவது, இலங்கை சிங்களவர்களின் பூமி. இங்கு தமிழர்களுக்கு இடம் இல்லை. அதனால் அவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் பெற முடியாதென்பது அவரின் நிலைப்பாடு. ஒரு காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த வேளை, எதிர்க்கட்சித் தலைவரான அ.அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்பட்ட அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அப்போது பாராளுமன்றத்தில் ஆளும் கட்சித் தரப்பில் இருந்த சிறில் மத்தியூவும், நெவில் பெர்னாண்டோவும் கொண்டு வந்திருந்தனர்.

தமிழன் என்ற ஓரே காரணத்திற்காக அமிர்தலிங்கத்தை காலிமுகத்திடலில் வைத்து கமுகு மரத்தில் ஏற்ற வேண்டும் என சிறில் மத்தியூ கூறிய வாசகம் ஈழத் தமிழர்களின் உள்ளங்களை ரணமாக்கியது.

நாட்டை ஆளும் மன்றத்தில் ஆட்சியாளர்கள் தமிழர்கள் குறித்து எப்படியும் கதைக்கலாம் என்ற கொள்கையை அன்று முதல் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றனர்.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்த போது அதனை எதிர்த்து சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்திருப்பார்களேயானால் இந்த மண்ணில் இனவாதப் போருக்கு இடமிருந்திருக்கமாட்டாது.

தமிழினத்தை முற்றாக ஓரம் கட்ட வேண்டும்- தமிழினத்திற்கு எதிராகச் செயற்படுவதன் மூலமே தம்மை சிங்களப் பற்றாளர்கள் என காட்ட முடியுமென்ற போலி நம்பிக்கைகளே இன்றைய இலங்கைத் தீவின் அழிவுக்கு காரணம் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

இவ்வாறு நிலைமை இருக்கும் போது பழையதை மறவாத சோமவன்ஸ பாராளுமன்றத்தில் மீண்டும் பயங்கரவாதத் தீயைப் பற்றவைக்க முற்பட்டுள்ளார். அதன் ஒரு கட்டமே தமிழ்க் கூட்டமைப்பினரை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கர்ச்சிப்பாகும்.

பல்லின மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பினரை முற்றாக வெளியேற்றி விடுவதன் மூலம் தமிழ் மக்களுக்கும், நாட்டிற்கும் இருக்கக் கூடிய தொடர்பை பற்றறுப்பதே சோமவன்ஸவின் குறிக்கோளாகும்.

"சேகுவராப் புரட்சி"யை மேற்கொண்டு ஆயிரக் கணக்கான அப்பாவி சிங்கள மக்களை கொன்று ஒழிப்பதற்கு காரண கர்த்தாக்களில் ஒருவராக இருந்த சோமவன்ஸ இன்னமும் திருந்தவில்லை என்பது புரிந்து விட்டது.

கொலைக் குற்றம் காரணமாக நாட்டில் தங்கியிருக்க முடியாத சோமவன்ஸ அமரசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தன்னைப் பாதுகாப்பதற்காக இந்த நாட்டின் உன்னதமான ஓர் பற்றாளராக காட்டிக் கொள்ள எத்தனிக்கின்றார்.

சோமவன்ஸ போன்ற பேரினவாதிகளால் மூட்டப்படும் இனவாதத் தீக்கு எண்ணெய் ஊற்றாமல் அதனை அணைக்க முன்வர வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்ப.. வாய்ப்பு உருவாகும்.

# அரசியல் அமைப்பை மாற்றும் நடவடிக்கைகள் மிகத் துரிதம்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு மாகாணசபைத் தேர்தலில் கிடைத்துள்ள வெற்றியையடுத்து, அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டுக்கான தமது பூரண ஆதரவை மாகாணசபைத் தேர்தலின் மூலம் இரண்டாவது தடவையாகவும் மக்கள் வழங்கியுள்ளதாக மங்கள சமரவீர கூறியுள்ளார். பெரும்பான்மையான மக்களின் ஆதரவு அரசாங்கத்திற்கே உண்டு என்ற யதார்த்த நிலையை உணர்ந்து, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க சகல எதிர்க்கட்சிகளும் முன்வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பாக திட்டமிட்டபடி அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், தற்போதைய தேர்தல் முறைமையை முன்னுரிமை அடிப்படையில் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள அரசியலமைப்பை மாற்றுவதானது சிறுபான்மை இனங்களின் நலன்களைப் பாதிக்கும் ஒன்றாகவே அமையுமென சிறுபான்மைக் கட்சிகள் பல சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதற்கான கடுமையான எதிர்ப்பையும் அவை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

## நுவரெலியாவைப் புறக்கணிப்பதாக இந்தியா மீது குற்றச்சாட்டு; அதிருப்தி

(நுவரெலியா)

தமிழர்கள் அதிகமாக வாழும் நுவரெலியாப் பிராந்தியத்துக்கு இந்தியா பாரிய அபிவிருத்தி உதவிகள் எதனையும் வழங்கவில்லை, என அந்த மாநகரின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான், ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் நுவரெலியா நகரின் அபிவிருத்திக்குப் பாரிய அளவில் உதவிகளை வழங்கி வருகின்றன.எனினும் இந்தியா குட்டி இங்கிலாந்து எனக் கூறப்படுகின்ற நுவரெலியாவின் அபிவிருத்திகளுக்கு உதவவில்லை என இந்தியன் எக்ஸ்பிரஸுக்கு செவ்வியளித்த, நுவரெலியா மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான், நீர் வடிகால் அமைப்புக்காக 57 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது. ரஷ்யா மின்சாரத் திட்டம் ஒன்றுக்காக 150 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது. இந்தியா இதுவரை எந்தவித உதவித் திட்டத்தையும் அறிவிக்கவில்லை என அவர் தனது பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## திருமலைத் துறைமுகம் வந்த ஆஸி.கப்பல் தரை தட்டியது

### அடிப்பாகம் முழுச் சேதம்

(திருகோணமலை)

அவுஸ்திரேலியாவில் இருந்து திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்த கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. ஒலிம்பிக் கெலக்ஸி என்ற பெயரைக்கொண்ட இந்தக் கப்பல் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்திருந்தது.

கப்பல் நங்கூரம் இட முயற்சித்த போது, அது தரை தட்டியதால் கப்பலின் அடிப்பாகம் முழுமையாக சேதமடைந்துள்ளது. கப்பலை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.குறிப்பிட்ட கப்பலில் பெருமளவு கோதுமை எடுத்து வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விலைக் கட்டுப்பாட்டு அதிகாரம் அமைச்சரவைக்கு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தை அமைச்சரவை உபகுழுவிற்கு வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அத்தியாசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் அமைச்சரவை உப குழுவின் கூட்டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நிதி, விவசாயம், மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிபத் துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் இந்த உபகுழுவில் உள்ளடக்கப்படுகின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தை உபகுழுவிற்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்படவுள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். மேலும் எதிர்வரும் நவம்பர் மாதம் ஏற்படும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான திட்டத்தையும் உருவாக்க இந்தக் குழு தீர்மானித்துள்ளது. (உ-60.10)

## ஜனாதிபதியின் கூற்றுக்கு ஹெல உறுமய கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

மாகாண சபையின் முடிவுகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்துவதற்கு மக்கள் வழங்கிய தீர்ப்பு என ஜனாதிபதி தெரிவித்திருப்பதை தமது கட்சி ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் அத்துரலியேரத்தின தேரர் கூறியுள்ளார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மக்களின் வாக்குகள் குறைந்த அளவிலேயே கிடைத்துள்ளன.

கடந்த பொதுத்தேர்தலை விட மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 20 வீதம் குறைந்தளவு வாக்குகளே மக்களால் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கடந்த பொதுத் தேர்தலை விட 35 வீதத்துக்கும் குறைந்த அளவிலேயே வாக்குகள் செலுத்தப்பட்டிருந்தன.

எனவே இரண்டு கட்சிகளினதும் கொள்கைகளை மக்கள் நிராகரித்துள்ளனர் என அத்துரலியே ரத்தினதேரர் தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங்கொட விகாரையில் தமிழ் இளைஞர்கள் தங்க வைக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்த அவர், அது தமது அரசியலை ஓரங்கட்டும் முயற்சியாகும் எனக் கூறியுள்ளார். (உ)

## கனேடியப் பல்கலாசார பண்பலை வானொலி பரீட்சார்த்த ஒலிபரப்பு

(கொழும்பு)

கனேடியத் தமிழ்ச் சமுதாயத்தின் முதல் பண்பலை (எட்எம்) வானொலியான கனேடிய பல்கலாசார வானொலி (எட் எம் 101.3) தனது பரீட்சார்த்த ஒலிபரப்பினை கடந்த இரு வாரங்களாக நடாத்தி வருகிறது.

கனடாவிற்கு புலம்பெயர்ந்த தமிழீழத் தமிழர்கள் கனேடிய தேசிய நீரோட்டத்துடன் விரைவாக இணைந்து வரும் அதே வேளை, தமது சமுதாயத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் செவ்வனே செய்து வருகின்றனர். இந்த வகையில் ரொறன்ரோவில் இதுவரை சிறப்பலை வரிசையூடான 24 மணிநேர வானொலிகள் 5 இருக்கின்றன. எனினும் இவற்றைக் கேட்பதற்கான வானொலிகளைத் தனியாக வாங்க வேண்டிய தேவை கடந்த காலத்தில் இருந்துவந்தது. எனினும் பண்பலை வரிசை ஊடான கனேடிய பல்கலாசார வானொலியின் வரவு (எட்எம்.1013) ரொறன்ரோ வாழ் தமிழ் மக்களிற்கான ஒரு வரப்பிரசாதமாகும். சாதாரண வானொலிப் பெட்டிகள், வாகனங்களிலுள்ள வானொலிகள் அனைத்திலும் இவ்வொலிபரப்பை மிகவும் தெளிவாகக் கேட்கக் கூடியதாகவுள்ளது. ரொறன்ரோவைத் தவிர மொன்றியல், வன்கூவர் போன்ற நகரங்களை மையமாக வைத்தும் பகுதி நேர மற்றும் சிறப்பலை வரிசை தமிழ் வானொலிகள் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

### சாயி அருளமுதம்



**உங்கள் அன்பைத் தூய்மையற்றதாக்கும் சுயநலம் உங்கள் பார்வைக்குத் திரையிட்டுத் தெய்வத்தை மறைக்கிறது. திரைபோட்டுத் தெய்வத்தை மறைக்கும் சுயநலத்துக்குக் காரணம் யாது? சரீரத்தின் மீது நாம் கொண்டுள்ள பற்றேயாகும். அது தான் எங்கள் மனதின் பலவீனம் .அதனா லேயே புலன்களுக்கு அடிமையாகியுள் ளோம்.**

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்த இ.தொ.கா.வின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைவதா, இல்லையா, என்பது பற்றி இறுதி முடிவெடுப்பதற்காகவும், மாகாண சபைகளில் எவ்வாறு செயற்படுவது என்பதைத் தீர்மானிப்பதற்காகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்குழு நேற்று முன்தினம் அவசரமாகக் கூடியது.

இ.தொ.கா. தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மத்திய ஆட்சியிலும், மாகாண ஆட்சிகளிலும் இ.தொ.கா. வின் பங்களிப்பை ஆளுங்கட்சி கோரி வரும் நிலையில் இக்கூட்டத்தில் அது தொடர்பாக ஆக்கபூர்வமாக விவாதிக்கப்பட்ட போதும், இறுதியில் தற்போதுள்ள நிலைப்பாட்டிற்கு மாறான முடிவுகள் எதையும் எடுப்பதற்கான எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லையென இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தற்போது ஆதரவு வழங்குவது குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லையென்றும், இது குறித்து இனி விவாதிப்பதில்லை என இறுதியில் முடிவு எடுக்கப்பட்டதாகவும் கட்சியிலுள்ள எம்.பி. முத்து சிவலிங்கம் ஊடகவியலாளரிடம் தெரிவித்துள்ளார். மலையக மக்களின் பல்வேறு சமூகப் பிரச்சினைகள், இன்னல்கள், நடைமுறைச் சிக்கல்கள் பற்றி மிக விரிவாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதொகாவின் அங்கத்தவர்கள் அனைவரும் கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எடுக்கும் எந்த முடிவிற்கும் இசைந்து செயற்பட இணங்கியுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# கொழும்பில் கம்பன் விழா இன்று ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடாத்தும் "கம்பன் விழா 2004" இன்று வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காலை யும், மாலையும் கம்பன் விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வில், கொழும்பு கம்பன் கோட்டத்தில் இருந்து கம்பன் திருவுருவப் படம் ஊர் வலமாக இராமகிருஷ்ணன் மண்ட பத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கொழும்பு கம்பன் கழகத் தலைவர் தெ.ஈஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், கடவுள் வாழ்த்து, தலைமை உரை, தொடக்க உரை, மற்றும் சிறப் புரை என்பன இடம்பெறவுள்ளது.

இதேவேளை "இடுதி தீ" (சீதை தீக்குளிப்புப் பற்றி பன் முகப் பார்வை) எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பரிசளிப்பும் சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ச)

## வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் மினிபஸ்ஸில் சிசுவைப் பிரசவித்த பெண்

### வேலணையில் நேற்றுச் சம்பவம்

(ஊர்காவற்றுறை)

பிரசவத்திற்காக வைத்திய சாலைக்குச் சென்று கொண்டி ருந்த பெண் தான் பயணம் செய்த சிற்றூர்திக்குள் பெண் சிசு வொன்றைப் பிரசவித்த சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிற்றூர்தியில் சின்னமடுவில் இருந்து ஏறிய கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு இடைநடுவில் வேலணை கண்ணபு ரத்தில் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

இதேவேளை, சிற்றூர்திச் சாரதி மனிதாபிமான முறையில் தாயையும் சேயையும் வேலணை கிராமிய வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

தீவுப் பகுதியில் போதிய வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறான அவலங்கள் எதிர்கொள்ளப்படுவ தாக சுட்டிக்காட்டப்படுகிறது.

(உ-75)

## ஜேர்மன் அமைச்சர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

ஜேர்மனிய வெளியுறவு அமைச்சர் ஜோஸ்கா பிஸ்ச்சர் மூன்று நாள் விஜயம் மேற் கொண்டு நாளை மறுதினம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் ஜனாதிபதி, பிரதமர், வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுக் களை நடத்துவார் இதன்போது இருதரப்பு உறவுகள் வர்த்தகம், உல்லாசப் பிரயாணம், இலங்கை யின் சமாதானம் போன்ற விடயங்கள் குறித்து பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

## இலங்கையில்...

என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத பாதுகாப்பு அமைச் சின் வட்டாரங்களை ஆதாரம் காட்டி தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளை முறியடித்து வெற்றி கொள்ளும் போர்த் தந்திரோபாயங்களை அமெரிக்கப் படை நிபுணர்களே இலங்கை அரசுக்கு வழங்கி வருவதாகவும் அமெரிக்க அரசாங்கத்தின் அங்கீகாரத் துடனேயே இந்த மறைமுகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று ஸ்ரற்.்.போர் நிறுவனம் தனது ஆய்வறிக்கை யில் கூறியுள்ளது.

இந்த இரகசியத் திட்டத்தின் விளைவாகவே, மட்டக்களப்பில் இருந்து தப்பியோடிய கருணா சில காலம் தலைமறைவாகி யிருந்த பின்னர் மீண்டும் தலையெ டுத்திருக்கிறார் என்றும் ஸ்ரற்.்.போர் நிறுவனம் சுட்டிக்காட் டியிருக்கிறது. அமெரிக்க - இலங்கை அரசுகளின் இந்த இரகசியக் கூட்டுத் திட்டத்தின் முதல் கட்டமாகவே, கருணாவுக்கு வானொலிப் பிரசார வசதிகள் செய்து கொடுத்து மக்கள் மத்தியில் குழப்பம் உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரச ஊடகங்கள் ஈடுபடுகின்றன என்றும்,அவை தவறான பிரசாரங் களை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என்றும் ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல் மற்றும் மிரட்டல்களை மேற்கொள்ளும் படையினருக்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஊடகர்கள் அமைப்பு இலங்கை அரசுக்குப் பரிந்துரைத் திருக்கிறது. (இ-5)

## நீதிமன்ற....

வரவேற்பு அணிவகுப்பு மரியா தையும் அளிக்கப்பட்டது.

பின்னர் முதலாம் குறுக்குத் தெருச்சந்தியிலிருந்து யாழ் மத்திய கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு முற்பகல் 10.30 மணிக்கு பிரதம நீதியரசர் கட்டடத் தொகுதிக்கான அடிக் கல்லை நாட்டினார். தொடர்ந்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதிச்சேவை ஆணைக் குழுச்செயலாளர் பி.டபிள்யு. டி.சி.ஜெயதிலக நீதியமைச்சின் செயலாளர் எஸ்.கே.ஹம்லத் உலக வங்கிக் கட்டட நீதி புனரமைப்புத்திட்ட இயக்குநர் திருமதி சுமத்திரா குணவர்த்தன, யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகன தாஸ், யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.. வரதராஜா, யாழ் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதிகளும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் ஆகியோ ரும் பான்ட் வாத்திய அணிவகுப் புடன் யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு யாழ் மேல். நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தலைமை யில் கூட்டம் நடைபெற்றது. இதில் நீதியமைச்சின் செயலாளர் ஹம்லத், திருமதி சுமத்திரா குணவர்த்தன ஆகியோர் உரை யாற்றினர்.

யாழ் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராஜா அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உரையாற்றினார்.

இதேவேளை பிரதம நீதியர சரின் வருகையையொட்டி இராணுவத்தினரும் பொலிசாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். பிரதம நீதியரசர் சென்ற வீதிகள் பாதுகாப்புக் காரணத்திற்காக குறிப்பிட்ட நேரம்வரை போக்கு வரத்துக்கு தடை செய்யப் பட்டிருந்தது.

(த-4,19)

## கல்வியங்காட்டில் தினமுரசு எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரிக்கு பின்புறமா கவுள்ள கழிவு நீர்வாய்க் காலுக்குள் 500க்கு மேற்பட்ட தினமுரசுப் பத்திரிகை இனந் தெரியாதோரினால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

இச்சம்பவம் நேற்றிரவு 8மணி யளவில் இடம்பெற்றது. பத்தி ரிகை எரிக்கப்பட்ட இடத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். (ச-4)

## யுத்தத்தை...

டாலும் வவுனியாவிலும் யாழ்ப் பாணத்திலும் இச்சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றன. விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுவதைப் போல் கிழக்கு மாகாணத்தில் குறிப்பிடப்படக்கூடிய பாரிய குற்றச் செயல்களோ, யுத்த நிறுத்த நிலைமைகளில் பாதிப்போ ஏற்படவில்லை. இதற்கு மாறாக அங்கு அமைதியான சூழ்நிலையே காணப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினருடனான சந்திப்புக்களில் கலந்து கொள்ளாவிட்டால் இருதரப்பின ருக்கும் இடையிலான முரண்பா டுகள் வளர்ந்து கொண்டே போகும். ஆனால் விடுதலைப் புலிகள் இதனைத்தவிர்த்து எதிர்காலத்தில் இராணுவத்தினருடனான பேச்சுவார்த் தைகளில் கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எனினும் நாட்டின் பாதுகாப்பி லும் அரசு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர் கொள்வ தற்கு இராணுவமும் கடற்படை யும் தயாராகவுள்ளது. கடற் படைக்கும் இராணுவத்திற்கும் விசேட நவீன ஆயுதப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிகளின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளை கடலிலும் தரையிலும் தாக்குவதற்கான திறமைகளை இராணுவமும் கடற்படையும் பெற்றுள்ளது. முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கடற் புலிகள் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற போதும் அப் பகுதிகளில் கடற்படை பலம் பொருந்தியதாகவும் காணப் படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வந்த நவீன தொலைத் தொடர்பு சாதனங்களை சுங்கத் திணைக்களம் கைப்பற்றி வைத் துள்ளது. கடற்படையினரின் பாவ னைக்காக இவற்றை சுங்கத் திணைக்களம் கடற்படையினரிடம் கையளிக்கவேண்டும் என்றும் இராணுவத்தளபதி இதன்போது கேட்டுக்கொண்டார். (ம-121)

## யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணியகம் நேற்றுத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பொது அமைப் புக்களின் ஒன்றிய நடுவப் பணிய கம் நேற்று முற்பகல் 10 மணி யளவில் காங்கேசன்துறை வீதி யல் வைபவ ரீதியாக திறந்து வைக் கப்பட்டது.

யாழ்.மாவட்ட பொது அமைப் புக்களின் ஒன்றியப் பொதுச் செய லாளர் ப.கனகலிங்கம் தலைமை யில் இடம்பெற்ற இந் நிகழ்வில்;

பொதுச் சுடரினை மாவீரர் ரஞ்ச னின் தந்தையார், நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், யாழ். மாவட்ட பொது் அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில், கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் தங்கராஜா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நடுவப் பணியகத்தின் பெயர்ப் பலகையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத தின் சிரேஷ்ட துணை பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் திரை நீக்கம் செய்துவைக்க;

கட்டடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் நாடவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வில், கருத்துரை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், தமிழ் மக்கள் அமைதி வாழ்வினை விரும்பி நிற்கும் இந்தச் சூழ்நிலையில், பேரின வாத அரசாங்கம் எம் மீது மீண்டும் ஓர் யுத்தத்தைத் திணிக்க முயல் கிறது. இது உடனடியாக நிறுத் தப்படல் வேண்டும்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமா தானப் பேச்சுக்கள் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபு அடிப்படையில் மீளவும் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இல்லையேல் பேரினவாதிகள் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் அங்கு உரையாற்றுகை யில்,

யாழ்.குடாநாட்டு மக்கள் ஆக்கிரமிப்புக்களையும், அடக்கு முறைகளையும் எதிர் கொள்ளும் போதெல்லாம் மக்களுடன் தோழோடு நின்று உழைத்தவர்கள் யாழ்.மாவட்ட பொது அமைப்புக் கள் ஒன்றியத்தினர்.

மக்களின் குரலாக உலக அரங்கில் தமிழ் மக்களின் அபிலா சைகளை ஒலிக்க விட்டவர்களும் இவர்களே.

இவ் அமைப்பினர் புதிய பரி ணாமமாக இந் நடுவப் பணிய கத்தை திறந்து வைத்தமை மகிழ்ச்சிக்குரியது என்று மேலும் தெரிவித்தார். (உ-4)

தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை
இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக் விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)

சங்குநாதம்
மேற்குலகப் பிரசன்னத்தின் முக்கியத்துவம்
-பேநுரு யேசுதாசன
ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை...
-நோயல்
சமாதானம் சாத்தியமா?
-பத்மன்
அலெக்ஸ் பரந்தாமன் எழுதும்
என்னைப் பாட வைத்தவள்




ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், சினிமாச் சிதறல் மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்...
வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்

இபபததரகை வலமபுர அன. கோ ஸதாபனததாரால இல.15 வெள்ளாநதெரு, யாழபபாணம எனனும முகவரயலுள்ள அவரகளது அசசகததல 15.07.2004 இல அசசடடு வெளயடபபடடது.